# வயலூரானின் வரிகள்



## கவிதைத் தொகுப்பு

ஆக்கம்:-செ.சுதாகரன்
(வயலூரான்)

# வயலூரானின் வரிகள்

(கவிதைத் தொகுப்பு)

**ஆக்கம்:- செ.சுதாகரன்**

(வயலூரான்)

நூல் :- "வயலூரானின் வரிகள்"

நூல் வகை :- கவிதைத் தொகுப்பு

ஆக்கம் :- திரு. செ.சுதாகரன் ( வயலூரான் )
முத்துமாரியம்மன் கோவில் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தொ.பேசி இல :- 0770710729

பதிப்புரிமை :- திருமதி சிவாஜினி சுதாகரன்
முத்துமாரியம்மன் கோவில் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

பக்கங்கள் :- I-XII+1-68=80

பிரதிகள் :- 500

பின் அட்டைப்படம் :- திரு. பாலா,
மட்டுவில் வடக்கு

அட்டைப்பட வடிவமைப்பு:- செல்வன்.சு.வரோதயன்

வெளியீடு :- 2016 , ஏப்ரல்

அச்சுப்பதிப்பு :- திருக்கணித பதிப்பகம்,
டச்சுவீதி,
சாவகச்சேரி

மதிப்பு :- 200/=

# அணிந்துரை

பண்டிதமணியாம் எங்கள் தமிழ்க்குருமணி இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை ஐயாவின் பாதங்களை வணங்கி அவர் தோன்றிய தென்மராட்சி மண்ணில் உதயமான கல்வயல் திரு.செ.சுதாகரன் அவர்களது "வயலூரானின் வரிகள்" என்னும் கவிதை நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அரச உத்தியோகத்தரான திரு. செ.சுதாகரன் அவர்கள் க.பொ.த உயர்தரவகுப்பில் கற்கும் பொழுதே பல கவிதைகளை ஆக்கியுள்ளார். மரபுக்கவிதை ஆக்குவது சிறிது கடினமான விஷயமெனினும் அம்முயற்சியில் மிக வெற்றியடைந்துள்ளார். கவிஞர் அவர்களுடன் எனக்கும் இருபது வருடங்களுக்கு மேலான தொடர்பு உண்டு.

தாய் , தந்தை , குரு , உழவு , போட்டி , விருந்தோம்பல் , நல்லைக்கந்தன் புகழ்மாலை , செல்லிடப்பேசி , முகப்புத்தகம் , தமிழ்மொழிச்சிறப்பு ஆகிய தலைப்புகளில் பல அருமையான கவிதைகளை யாப்பு அமைதிக்கேற்ப ஓசை நயத்துடன் ஆக்கிப்படைத்துள்ளார். இவற்றுட் சில பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன. அவரது கவிதைத் திறத்தினதும் தாகத்தினதும் வெளிப்பாடான இந்நூல் தமிழ் உலகுக்குக் கிடைத்த ஒரு நற்பரிசாகும். அவர் மேலும்பல கவிதை நூல்களைத் தமிழுலகிற்கு வழங்கவேண்டுமெனவும் அதற்கான உற்சாகம் கிடைக்க வேண்டுமெனவும் வேதவனப்பிள்ளையாரை பிரார்த்திக்கின்றேன். வயலூரான் என்னும் பெயரால் மேலும்பல ஆக்கங்கள் உருவாக எனது வாழ்த்துக்கள் உரியதாகுக.
வணக்கம்.

**பண்டிதை திருமதி பொன். பாக்கியம்**
சுழிபுரம்

# சிறப்புப் பாயிரம்

வேதவனப் பிள்ளையினை வேண்டித் தமிழ்பாடி
மேலான பணியினை செய்திட்ட சீலன்
சாதனைகள் புரிந்து தமிழினை வளர்ப்போன்
சாற்றரும் மட்டுவில் வடக்கில் வாழ்வோன்
நாதமிகு சந்தம் நன்றாய் மிளிரும்
நற்பாடல் யாத்த நல்ல வயலூரான்
போதனையே செய்யும் புதுமை மிகுவரிகள்
புகன்றதனை கற்றோம் போற்றிடு வோமவனை

அன்னைபிதா குருவை அன்போடு பாடி
அதனோடு மதிப்பீடு சமரசம் சொல்லி
மன்னரும் போற்றும் உழவனைப் போற்றி
வையத்து மலியும் சுகதுக்கம் கூறி
முன்னவரும் அறியாத முகநூலை வியந்து
முடங்கி கிடக்கும் தீங்கினை விரித்து
சொன்னாரே எந்தன் சொல்லரிய நண்பன்
தூயநற் கவிஞன் சுதாகரன் தானே

"அருமை" "தெரியும்" அழகுறு பாக்கள்
அகிலத்து போட்டியும் அருந்தமிழ் சிறப்பும்
பெருமை யில்லா மதுவினை அழித்து
பேசிய துட்டரைப் பேசாது பாடி
திருவளர் தென்மரா ட்சியின் சிறப்பும்
செகமது திருந்தச் செப்பும் வரிகளை
மரபுக் கவியால் வழங்கிய சுதாகரன்
வையகம் போற்ற வாழி நீடூழி

சடையாளி
காரைநகர்

கவிஞர் திரு. வே. குமாரசுவாமி

## நயப்புரை

யாழ்ப்பாணம் தென்மராட்சி நிலப்பரப்பானது பலஆக்க இலக்கியப் படைப்பாளிகளைத் தன்னகத்தே கொண்டிலங்கும் நிலப்பரப்பாகும். அந்த வரிசையிலே ஒருவர்தான் தன்னை "வயலூரான்" எனவிழிக்கும் திரு. செ.சுதாகரன் அவர்கள் ஆவார். இவர் புத்தாக்கக் கவிதைகள் கோலோச்ச ஆரம்பித்த காலமான ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நான்கில் கவிதைகளை எழுத ஆரம்பித்தார். புத்தாக்கக் கவிதைவழி செல்லாது மரபு வழியில் தன் கவியாக்கத்தை மேற்கொண்டு வந்தார். மரபு வழியில் வெண்பா , ஆசிரியப்பா , கட்டளைக்கலித்துறை , சமநிலைச் சிந்து ( நாற்சீர் இரட்டை ) எண்சீர்விருத்தம் ஆகிய வடிவங்களில் தன் கவிதை வரிகளை முன்னகர்த்திச் செல்வது அவரின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

"வயலூரானின் வரிகள்" என்னும் இக்கவிதைத் தொகுப்பு நூலில் இவ்வடிவங்கள் பரவிப் படர்ந்திருப்பதை நாம் நிறையவே காணலாம். தனது குலதெய்வமான வேதவனப் பிள்ளையாரை நெஞ்சிருத்தி இவர் எழுதியுள்ள இக்கவிதைத் தொகுப்பில் தாய் , தந்தை . குருவானவர்களைத் தொடராகக் கொண்டு தலையங்கங்கள் தீட்டி இவர் அவற்றை இருபாகங்களாக்கி முதற்பாகத்தில் சமுக விழுமியங்களையும் இரண்டாவது பாகத்தில் பிராந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்த கவிதைகளோடு நல்லூர்க்கந்தசுவாமி ஆலயத்தின் திருவிழாக்களின் போது காலத்திற்குக் காலம் வெளிவந்த கவிதைகளையும் இணைத்துள்ளமை அவரின் பக்திமேம்பாட்டினையும் சுட்டி நிற்கின்றது.

இவரின் கவிதை வரிகளை நயந்து நுகர்ந்து பார்ப்போம். (பக்கம் 03) தாய்பற்றிய கவிதைவரிகளில்

"என்னின்பம் தனைக்காண என்றுமே எண்ணியே
தன்னின்பம் தொலைத்து தரணியிலே உழைத்து
என்னுயர்வு கண்டுமே ஏரகத்தில் மகிழ்ந்திடும்
அன்னைதன் அருமையது ஆயுள்வரை மறக்குமோ"

எனவரும் அடிகள் தாயுள்ளத்தை படம்பிடித்துக் காட்டுவதை நாம் உணரும்வகை செய்கின்றது.

" நாடுவிட்டு நாடுசென்று நாமுழைத்துச் சேர்த்தாலும்
கூடுவிட்டு ஆவிபோனால் கூடவே வருவாரில்லை
மாடுமனை மக்களெல்லாம் மறுவழிக்கு வருவதில்லை
கேடுகெட்ட உடலுக்காய் கெடுவழியிற் செல்லவோ"

எனச் "சமரசம்" தலைப்பிலான கவிதை வரிகளில் அறிவுரை கூறும் கவிஞர் மேலும் இவ்வாறு கூறுகின்றார்
(பக்கம் 07)

" வாதங்கள் புரிந்துமே வாழ்நாள் முழுதும்
ஏதங்கள் செய்து ஏட்டிக்குப் போட்டியாய்
பாதகம் புரிந்தோர் பாழுமுயிர் போயிடின்
பேதங்கள் இன்றியே உறங்குமிடம் ஈதாமே"

பேதமில்லாமல் உறங்குமிடத்தை மறைமுகமாக கவிஞர் வெளிப்படுத்தியமை மிக அலாதியானது.

பெற்ற தாயினைப்போல் பிறந்த மண்ணையும் நேசிக்கும் கவிஞர் " வருவிருந்தோம்பும் தென்மராட்சி" என்னும் கவி வரிகளில்
(பக்கம் 21)

கனிதரும் சோலைகளும் கவினுறுவயல் வெளிகளும்
காசினியில் எம்பெருமை காற்றோடு பரப்பிடும்
தனியாள் வீட்டினுளும் தாங்குநற் கூடைகளில்
தானியங்கள் எந்நாளும் தன்னிறைவாய் காணுமே
நனிசுவை நல்கிடும் நற்பனையின் பயன்களாகும்
நல்லபுழுக் கொடியலும் நற்பனாட்டு மீங்கே
நனிமிகை யாகவெம் நற்குடிலில் தானுண்டு
நாநிலத் தோர்க்கிவை நற்பயன் நல்குமே

தம் தென்மராட்சி மண்ணினை நாடிவரும் விருந்தினருக்கு வழங்கவென தனியாள் வீட்டினுள்ளும் களஞ்சியங்கள் இருக்குமெனக் கூறும் கவிஞரின் கூற்றுப்படி இங்கே தனியாள் என்பது ஏழ்மையின் நிலையில் வாழ்பவனைக் குறிப்பதாகும். எண்சீர் விருத்தமதில் புனைந்திருக்கும் வரிகள் வயலூரானுக்கே சொந்தமான கவிவரிகள் என்பதைக் கூறுவதில் நான் புளகாங்கிதம் அடைகின்றேன். இதே போன்று மேலும் ஒருபடி மேல்சென்று ( பக்கம் 23)

சுற்றிவர நீரேரி சூழ்ந்துளதெம் மண்ணே
சுந்தரத் தமிழ் வளரும் ஊரே
பெற்றுள வளமதால் பெருமையுறும் மண்ணே
பெரும்பரப்பு கொண்டவெம் ஊரே
தற்றுணிவு கொண்டே தழைத்திடும் மண்ணே
சமயங்கள் பலவுமுள ஊரே
சுற்றிவர ஆலயங்கள் சூழ்ந்தவெம் மண்ணே
சோதனைகள் பலகண்ட ஊரே

எனக்கூறி தனது ஊரைச் சிறப்பிக்கின்றார். உண்மையான ஒரு கவிஞனின் கற்பனையில் எழுகின்ற கவிதைவரிகள் நிதர்சனத்தை வெளிக்காட்டுவனவாகவே அமைகின்றன.

மாற்றங்கள் என்னும் கவிதையில் அன்று எம்மண்ணில் நிகழ்ந்த நிகழ்வுகளை புடம்போட்டுக் காட்டும் கவிஞர் இன்றைய மாற்றங்களையும் நன்கு குறிப்பிடத் தவறவில்லை.(பக்கம்-26-28)

உற்றார் தம்மோடு ஊரவரும் ஒன்றுகூடி
உணவருந்தும் முறையதும் உலககன்று போச்சு
பற்றுடனே யறிவித்துப் பணமதும் கட்டிவிட்டால்
பாங்காய்ப் பொதிகளிலே உணவுவரும் நாளாச்சு

வாசலிலே தொங்குகின்ற வடிவான மாவிலையும்
வாகாய்த் தயாராக விற்பனைக்கும் வந்தாச்சு
போசனம் அளித்திடவே பொலிவாய் அளித்திடும்
புகழ்மிகு வாழையிலை போயகன்று நாளாச்சு

இவ்வாறு மாற்றங்கள் பற்றிக் கூறும் கவிவரிகளிலே வயலூரான் மிகக்கவலையோடு இதற்கு விளக்கம் அளிக்கும் கவிதை வரிகளில் பின்வருமாறு கூறி ஆறுதலடைகின்றார் ( பக்கம் 28)

வளர்ந்துவரும் நாகரீகம் வசதிகளைப் பெருக்கிட
வழக்கழிந்து போகுதிங்கு வண்டமிழர் பண்பாடு
வளர்ச்சியின் போக்கிலே வழக்கத்தை மாற்றுகின்றார்
வருந்திப் பயனென்ன வருவதை ஏற்போமே

இக்கவிதை வரிகள் சமநிலைச் சிந்து (நாற்சீர் இரட்டை) என்ற வடிவத்துள் அமைந்தமை குறிப்பிடத் தக்கது.

வயலூரான் கவிதை வரிகளிலே நல்லூரானுக்கென தனியிடம் தந்துள்ளார். வெண்பாக்களும் எண்சீரும் நிறைந்துகாணும் இக்கவிக்கலசத்தில் யாழ்ப்பாணப் போர்க்காலச் சூழலில் செல்லிடம் எதுவெனத் தெரியாது தவித்த மக்களுக்காய் முருகனைப் பின்வருமாறு வேண்டுகின்றார். (பக்கம் 48) இது வெண்பாவில் அமைந்த கவிதை.

சொல்லாடிக் கைலையிலே பிரணவப் பொருளுரைத்து
நல்லூரிற் குடிகொண்ட நாதா - எல்லோரும்
தொல்லைகள் இல்லாத் தூயவாழ்வு பெறச்
செல்லிடம் எதுவெனச் செப்பு

தமிழைப் புறக்கணிக்கும் நடிப்புச் சுதேசிகள் தமிழில் அரசகருமங்களை ஆற்றமாட்டார். இந்த மண்ணில் எமது மொழிக்கு சமத்துவம் இருக்கிறது. அதனை நீங்கள் மதிக்கவில்லை. தென்பகுதிக் கடிதங்கள் சிங்களத்தில் வருகுதென்று கொக்கரிக்காதீர்கள் எனக் கூறும் " பரப்புவோம் பைந்தமிழை" என்னும் கவிதையிலே ( பக்கம் 55,56)

அரசகருமம் அனைத்தும் அன்னை தமிழதனில்
கிரமமாய் நாமாற்றிக் கீர்த்திபெற வைப்போமே
சிரமமதை நாமெவர்க்கும் சிறிதும் வைக்காமல்
பரப்புவோம் பைந்தமிழை பார்மீது எந்நாளும்

ஆசிரியப்பாவிலே கவிஞரால் கொணரப்பட்ட எட்டுக் கவிதைகளும் மிகவும் அற்புதமான வரிகள் என்றே கொள்ளலாம்.

இறுதியாக ஊழல் மலிந்த உலகினில் சிக்கி மக்கள்படும் துயரமதை எடுத்தியம்பும் கவிஞரின் அங்கலாய்ப்பு பின்வருமாறு வரிவடிவம் பெறுகின்றது. (பக்கம் 66,67).

எப்போது கண்டு இனிதாகப் பாடுவேன்
இப்பாரில் ஊழல் இல்லையெனச் - செப்பியே
நாளும் நல்லோராய் நம்மக்கள் ஈங்கே
வாழும் வகையினை வழுத்தி

வயலூரானின் வரிகளை நான்சுவைத்து நயம் தந்தேன். கவிஞரின் கற்பனைக் கனவுகள் மேலும் சிறக்க எல்லாம் வல்ல வேதவனப் பிள்ளையைப் பணிகின்றேன்.

**அரியாலையூர் கலாபூஷணம் சி.சிவதாசன் (ஜே.பி)**

## என்னுரை

ஒரு கவிஞனுடைய படைப்புக்கள் பெரும்பாலும் அவன் வாழ்ந்த காலச்சூழலையும் அவனது வாழ்வில் இடம்பெற்ற சம்பவங்களையும் அதனால் அவனடைந்த தாக்கங்களையும் வெளிக்கொணர்வதாகவே அமையும். நாட்டு நடப்புகள் . குடும்ப உறவுப் பிணைப்புக்கள் , நட்பு வட்டங்கள் , பணியிடங்களில் ஏற்படும் தாக்கங்களையும் இவை இனங்காட்டுபவையாக அமையும். அத்தோடு அவனது எண்ணக் கிடக்கைகள் , எதிர்பார்ப்புகள், தனக்குக் கிடைத்த மற்றும் கிடைக்காத சந்தர்ப்பங்கள் பற்றியும் தெரிவிப்பனவாகவும் அமைந்து காணப்படும். அதனால்தான் ஒரு கவிஞன் "காலத்தின் கண்ணாடி" என அழைக்கப்படுகின்றான்.

அந்த வகையில்தான் எனது இப்படைப்பிலுள்ள கவிதைகளும் அமைகின்றன. மாதா, பிதா , குருவை முதலில் பாடிப் பின் மண்ணினை வளப்படுத்தி விவசாயம் செய்து உணவளிக்கும் உழவனையும் பாடியுள்ளேன். அத்தோடு நான் பிறந்து வளர்ந்த தென்மராட்சி மண்ணைப்பற்றியும் இரு கவிகள் எழுதியுள்ளேன். எப்போதும் நான் மற்றவர்களைவிடச் சற்று வித்தியாசமாகச் சிந்திக்கும் போக்குடையவன். அந்த வகையில் இத்தொகுப்பிலுள்ள கவிகளில் சில மற்றவர்களின் கடுமையான விமர்சனத்துக்கும் உள்ளாகலாம். மாற்றங்கள் , பிறந்தநாள் , இல்லையே பெண்ணடிமை , உழவர் வாழ்வில் மறையும் சடங்குகள் . மங்கையர் வாழ்வில் மறையும் பழக்கங்கள் , பாகுபாடு, ஊழல் மலிந்த உலகு போன்ற கவிகளை வாசிக்கும்போது இவ்வுண்மை புலப்படும்.

இத்தொகுப்பு இரண்டு பிரிவாகப்பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதி என்னால் அண்மைக்காலத்தில் அதாவது இவ்வாண்டில் எழுதப்பெற்ற கவிகளாகும். இரண்டாம் பகுதி ஆரம்பகாலம் முதல் என்னால் எழுதப்பெற்று பத்திரிகைகளில் வெளிவந்தவற்றில் என்னிடம் இருந்த சில கவிகளின் தொகுப்பாகும். பத்திரிகைகளில் வெளிவந்த எனது கவிகளின் நறுக்குத்துண்டுகளை

நான் சேமித்து வைத்திருந்த போதும் அவற்றில் பல இரண்டாயிரமாம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின்போது அழிந்துவிட்டன. என்னிடம் எஞ்சியிருந்த கவிகளையும் , உதயன் பத்திரிகை நிறுவனத்தினரின் நூலகத்திலிருந்து தேடியெடுத்த சில கவிகளையும் இணைத் துள்ளேன். உதயன் பணிமனையினரும் அடிக்கடி பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தமையால் அவர்களிடமும் பத்திரிகைப் பிரதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிராத காரணத்தால் எனது கவிகளை முழுமையாகத் தேடியெடுக்க முடியவில்லை. பின்னாளில் அவை கிடைக்கப்பபெற்றால் பிறிதொரு தொகுப்பில் அவற்றை வெளியிடலாமென எண்ணுகின்றேன்.

1987 ம் ஆண்டில் நவராத்திரி காலப்பகுதியில் எனது "நிலையான மனம் தருவாய்" என்னுந் தலைப்பிலான முதலாவது கவிதை உதயன் பத்திரிகையில் வெளிவந்தது. எட்டு வரிகள் கொண்ட அக்கவிதையின் முதல் நான்கு அடிகள் மட்டுமே எனக்கு நினைவில் உள்ளது. ஏனைய நான்கு வரிகள் எவ்வளவு முயற்சித்தும் நினைவுக்கு வர மறுக்கின்றது.

நிலையான மனம் தருவாய் தேவி
நிலையான மனம் தருவாய்
அலைபாயும் மனதுடனே நாளும்
அல்லல் படுகின்றேன் நான்

என்பதே அந்த முதல் நான்கு வரிகளாகும். சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பில் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் என்னால் படைக்கப்பட்டு முதன்முதலாகப் பத்திரிகையில் வெளிவந்த இக்கவிதையை முழுமையாகப் பிரசுரிக்க முடியாமை எனக்கு மிகுந்த மனவேதனையைத் தருகின்றது. இவ்வகையில் எனது கணிப்பின்படி 1987 முதல் 2000 ம் ஆண்டுவரையான காலப்பகுதியில் வெளிவந்த கவிகளில் தற்போது பிரசுரிக்கப்பட்டவை தவிர இன்னும் சுமார் 25 கவிகளாவது இருக்கவேண்டும். அவை கிடைக்குமா என்பது கேள்விக்குறியே. வாசகர்கள், கவி ஆர்வலர்கள் யாரிடமாவது மேற்படி கவிகள்

இருந்தால் என்னிடம் தொடர்பு கொண்டு தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவை செ.சுதாகரன், மட்டுவில் வடக்கு அல்லது மட்டுவில் சுதாகரன் அல்லது செ.சுதாகரன் அல்லது வயலூரான் என்னும் பெயர்களில் வெளிவந்துள்ளன.

இத்தொகுப்பினை வெளியிடுவதற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கியவரும் இத்தொகுப்பிற்குச் சிறப்புப் பாயிரம் வடித்தளித்தவரும் எனது ஆரம்பகால அலுவலக நண்பருமாகிய கவிஞர் காரைநகர் திரு.வே குமாரசுவாமி அவர்களுக்கும் தனது தள்ளாத வயதிலும் தளர்ச்சியையும் பொருட்படுத்தாமல் எனது வேண்டுகோளைத் தட்டிக்கழிக்க முடியாதெனத் தெரிவித்து நல்லதொரு அணிந்துரை வழங்கிய சுழிபுரம் பண்டிதை திருமதி பொன் பாக்கியம் அவர்களுக்கும், இந்நூலினை முழுமையாக வாசித்து நல்லதொரு நயப்புரை வழங்கிய அரியாலையூர் திரு.சி.சிவதாசன் அவர்களுக்கும் நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். அத்துடன் இந்நூலிற்கான பின் அட்டைப்படத்தை வரைந்தளித்த மட்டுவில் வடக்கு திரு பாலா அவர்களுக்கும் அழகுற இந்நூலை அச்சேற்றித்தந்த திருக்கணித பதிப்பகத்தினருக்கும் அத்துடன் இந்நூல் வெளியீட்டிற்கு எனது வேண்டுகோளை ஏற்று நிதியுதவி வழங்கிய எனதுபள்ளித்தோழன் திரு. ந.முரளிதரன் அவர்கட்கும் எனது உறவினரான திரு.ந.ஜெயந்தன் அவர்கட்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலில் அடங்கியுள்ள கவிகள் பற்றிய அறிஞர்களுடைய ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்பார்க்கின்றேன். இந்நூலிற்கு வாசகர்களிடமிருந்து நல்லாதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன்.

நன்றி.

அன்புடன்
**வயலூரான்**

## காப்பு

கற்றவர் நிறைந்திலங்கு கல்வயற் பதிமேவும்
வெற்றியே நல்கிடும் வேதவனப் பிள்ளாய்
பற்றியே யுன்னடி பரவிநான் பணிந்தேன்
இற்றரை புகழநீ எனக்கருள் செய்வாயே

வேதவனப் பிள்ளாய் வேண்டும்வரம் தருவோய்
சோதனைகள் பலகடந்து சுந்தரமாய் ஈங்குமே
காதலுடன் நானுமிக் கவிநூலைப் படைத்தேன்
ஏதங்கள் வாராமல் என்றுமே காப்பாயே

மண்புகழும் மட்டுவிலின் வடபால் மேவும்
கண்ணகையே எங்கள் கருணைமிகு தாயே
வண்ணமாய் இப்புவியில் வடித்தொரு கவிநூலை
திண்ணமாய் தந்தேன் திறம்பெற அருள்வாயே

என்மனத்து உதித்தெழுந்த எண்ணமெலாம் ஒன்றாக்கி
சின்னதாய் நூலாக்கிச் செகத்தினிற் படைத்தேன்
நன்றிந்த நூலதும் நாநிலத்துப் புகழுற
உன்னருளே தருவாய் உத்தமியாம் கண்ணகையே.





# அம்மா

திங்கள் பத்தாயெமைச் சுமந்துமே பெற்றாள்
பங்கமது வாராமல் பகலிரவாய்க் காத்தாள்
தங்களது துயரத்தை துச்சமென மதித்தாள்
எங்களது இன்பமதை எந்நாளும் நினைத்தாள்

இன்னமுதம் தந்தெமை இப்புவியில் வளர்த்தாள்
தன்னலத்தை மறந்தெமைத் தரணியில் காத்தாள்
மன்னவராய் எம்மையிம் மாநிலம் போற்றிடத்
தன்னையே யுருக்கித் தகையாய் வளர்த்தாள்

நோய்நொடிகள் சூழ்ந்துநாம் நொந்துமே வாடாமல்
ஓய்வின்றி எங்களுக்காய் எந்நாளும் உழைத்தாள்
சேய்களாம் நாங்களிச் செகமதில் உயர்ந்திடவே
வாய்ப்புகள் பலதந்து வாழ்த்துவாள் அன்னை

அறிவுரைகள் சொல்வாள் அவனிமிசைக் காப்பாள்
நெறிமுறைகள் தவறிடாது நேர்வழியில் நடப்பாள்
தறிகெட்டுத் தீயவழித் தவறியுநாம் செல்லாமல்
செறிவுடைய நல்லுரைகள் தெளிவாகத் தருவாள்

அல்லும் பகலும் அநவரதமும் அவனியதில்
எல்லையில் துயரங்கள் எமைச்சூழ வந்திடினும்
தொல்லைகள் கூடிநாம் துவண்டுமே போகாமல்
நல்லுரைகள் தந்தெமை நாளுமிங்குக் காப்பாள்

வேதனைகள் சூழ்ந்துநாம் வெந்துமே மடிகையில்
காதலுடன் அணைத்துக் கதைகள் பலபேசியே
நோதலின்றிக் காப்பாள் நோகமால் வளர்ப்பாள்
ஆதரவாய் எம்மையே அனுசரிக்கும் அம்மாவே

# தாய்

பத்துமாதம் எனைச்சுமந்து பாசமுடன் பெற்றெடுத்து
இத்தரையில் இன்னலின்றி என்னையே வளர்த்தெடுத்து
வித்தகனாய் உயர்வுபெற விருப்பமாய்க் கற்பித்தாள்
இத்தரையில் அவள்கடன் எப்போநான் முடிப்பேனோ

மார்மேலும் தோள்மேலும் மகிழ்ந்தெனைச் சுமந்திருந்து
பேர்பெறவே வளர்த்திடப் பெரும்பாடு பட்டுழைத்து
பார்தனில் பக்குவமாய் பட்டறிவு மேலோங்கச்
சிர்பெறவே செய்திட்ட செய்நன்றி மறப்பேனோ

சிறுவயதில் நான்செய்த சிறுகுறும்பு எல்லாமே
பொறுதியாய் ரசித்துப் பூரித்துப் பார்த்திருந்து
உறுமின்பம் கண்டிருந்த உத்தமத் தாயிவளை
பெறும்பிறவி எங்கணுமே பெட்புடன் போற்றுவனே

நோய்நொடிகள் வாராமல் நொந்துமனம் வாடாமல்
சேய்களையே காத்திடச் செகமதில் நிதம்வருந்தி
ஓய்வின்றி யுழைத்த உத்தமத் தாயவள்
நோய்நொடி அண்டாது நூறுநாள் வாழணும்

என்னின்பம் தனைக்காண என்றுமே எண்ணியே
தன்னின்பம் தொலைத்து தரணியில் உழைத்து
என்னுயர்வு கண்டுமே ஏரகத்தில் மகிழ்ந்திடும்
அன்னைதன் அருமையது ஆயுள்வரை மறக்குமோ

காதலுடன் அணைத்துக் கதைசொல்லி உணவூட்டி
ஏதமின்றி எந்நாளும் ஏரகத்தில் நான்வாழ
சாதகமாய் பணியாற்றி சகலதும் எமக்களித்து
வேதனைகள் நீங்கிநாம் வெற்றிபெற உழைத்தவரே

# தந்தை

தந்தை செய்யும் தியாகம் வெளித்தெரிவதில்லை
தரணியில் அதற்கோர் ஈடுஇணை யில்லை
சிந்தை முழுதும் சேய்களெமை எண்ணிநிதம்
செயலாற்றும் அவருக்கிணை யாருமில்லை

ஓடியோடி யுழைப்பார் ஓய்வுதனை எடுப்பதில்லை
ஒருநாளும் அவரிங்குச் சோர்ந்திருப் பதில்லை
தேடித்தேடி யெங்களது தேவைகளை முடிப்பார்
தெளிவான நல்லுரைகள் தந்தெமை வளர்ப்பார்

குற்றங்கள் செய்கையி லெமைத்தண்டிக்க மாட்டார்
குறையதனை எடுத்தியம்பித் திருத்திட முயல்வார்
பெற்றிருக்கும் தன்னறிவால் பெருமையுற வைப்பார்
பேரவையில் எமையே முந்திடச் செய்வார்

தன்புதல்வன் மேன்மைகண்டு தான்மிகவே மகிழ்வார்
தரணியில் அவருக்கிணை தந்திட யாருமில்லை
என்புதல்வன் என்மைந்தன் என்றெண்ணி மகிழ்வார்
ஏற்றமது யாம்பெறவே எந்நாளும் உழைப்பார்

பேரறிஞர் சபைதனிலே பெருமைபல பெற்றிடவே
பெரும்பணிகள் அவரியற்றிப் பேரின்பம் காண்பார்
சீரறிஞர் எல்லாம் சிறப்புடனே எமைப்போற்றச்
சிந்தை மகிழ்ந்து சிரித்துமே யிருப்பார்

இல்லையென்று ஒருவார்த்தை ஒருநாளும் உரையார்
இயன்றவரை எல்லாம் தந்திட முயல்வார்
நல்லுரைகள் தந்துமே நமைப்பேணி வளர்ப்பார்
நாமின்பம் காணவே தாமின்பம் பெறுவார்

தன்துன்பம் பாரார் தரம்தாழ்த்த மாட்டார்
தாயினும் மேலாயவர் தாங்கியே காப்பார்
அன்பதனை வெளிப்படையாய் அவருணர்த்த மாட்டார்
அகத்தினில் வைத்தேயெமை ஆதரித்துக் காப்பார்

தந்தை போலிங்குத் தெய்வம் ஒன்றில்லை
தரணியில் அவருக்கே ஈடுஇணை யில்லை
சிந்தை தனிலவரைத் தெய்வமாய்க் கொண்டே
சீரடிகள் தொழுவோம் சிறப்பெலாம் பெறுவோம்

## நனிசிறந்து வாழுவமே

எண்ணும் எழுத்தும் எமக்கே அறிவித்துக்
கண்ணும் கருத்துமாய்க் காசினியில் உயர்த்தி
மண்ணும் புகழும் மாண்பினை அளித்தார்
கண்ணினும் மேலாய்க் கருதிடும் குருவானவரே

தாய்மொழியாம் தமிழதனில் தரமான கல்வியினை
ஓய்வின்றி எமக்களித்து உயர்வழி காட்டியே
சேய்களெமை ஆளாக்கிச் செகமதில் உயர்த்திட
வாய்ப்பளிக்கும் ஆசான்கள் வாழியவே பல்லாண்டு

அன்னை தமிழொடு அழகான ஆங்கிலமும்
இன்னமுது போலெமக்கு இலகாகக் கற்பித்தே
என்றுமுயர் விஞ்ஞானம் ஏற்றமிகு கணிதமோடு
மன்னுபுகழ் வரலாறும் மாண்புறக் கற்பித்தார்

வாழ்வினுக் கவசியமாம் வாகான சுகாதாரம்
தாழ்வினைத் தவிர்க்கும் தகைசார் கணனியும்
தாழ்வின்றித் தந்தார் தரணியில் உயர்வாய்
வாழ்வில் உயர்ந்திட வழிபலவும் தந்தார்

பாடநூல் மட்டுமவர் பாடமாய்த் தராமல்
பாடமாய் எமக்குப் பலதுறை தந்தார்
பாடமாய் அவரும் பல்லறிவு தந்ததால்
பாடமாய் அவரும் பரிணாமம் கண்டாரே

நல்லறிவு தந்தெமை நாளுமே யுயர்த்தி
வல்லவராய் நாம்வாழ வழிகள்பல வகுத்திடும்
நல்லாசான் தம்மையே நாளுநாம் வணங்கி
நல்லவராய் நாமுலகில் நனிசிறந்து வாழுவமே

எமக்கறிவு ஊட்டுதற்காய் எந்நாளும் தாம்படித்து
நமதறிவு உயர்த்திட நாளெலாம் உழைப்பவர்
எமதுணர்வை மதித்துமே எமக்கிசைவாய் கற்பித்து
தமதுபணி முடிக்கும் தகைசார் ஆசிரியரே

# மதிப்பீடு

கல்விகள் கற்கும் வேளையது தன்னில்
காலங்கள் தோறுமிங்கு கணிப்பீடு
எல்லைகள் தந்துமே ஏற்றபடி அதனில்
ஏற்றங் காணவொரு மதிப்பீடு

கற்றுத் தேறிக் கடந்திட்ட போதிலும்
காட்டுவார் எமக்கொரு கணிப்பீடு
நற்பெரும் குணங்கள் நலமே இவனும்
நன்குறப் பேணிடவொரு மதிப்பீடு

பணியிடந் தன்னில் பற்பல வேளைகளில்
பணிதனைக் கணக்கிட மதிப்பீடு
பணியிலே உயர்த்திப் பதவிகள் தந்திடப்
பரீட்சை மூலமொரு மதிப்பீடு

காரிகை தன்னைக் கைப்பிடித் தளித்துக்
கணவனாய் இவனுக்கொரு மதிப்பீடு
பாரிடந் தன்னில் பற்பல வேளைகளில்
பாங்குடன் இவனுக்கொரு மதிப்பீடு

சமுகந் தன்னில் தகைபெற ஈங்குச்
சந்ததம் இவனுக்கொரு மதிப்பீடு
சமுகந் தன்னிலே வாழ்ந்திடும் வரையில்
சந்ததம் தொடருமிந்த மதிப்பீடு

வாழ்நாள் தொடரும் இந்த மதிப்பீடு
வகைதொகை இதற்குக் கிடையாது
வாழ்நாள் சிறந்திட வேண்டும் என்னில்
வென்றிடல் வேண்டும் மதிப்பீடு

- பகுந்துளிர்-4
பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி

# சமரசம்

ஆண்டியாய் இருந்தாலும் அரசனாய் ஆண்டாலும்
மாண்டபின் இங்குதான் மண்ணுளோர் வருவர்
ஈண்டிந்த உண்மையினை எம்மனதில் எண்ணியே
வேண்டாம் பிரிவென்று விருப்பமும் கொள்வமே

பேதங்கள் பலகாட்டிப் பிரிவினையை வளர்த்துமே
ஏதங்கள் அதிகரிக்க எந்நாளும் துயருடனே
வாதங்கள் புரிந்துநாம் வாழ்வதனை விடுத்துமே
மாதவங்கள் செய்திந்த மண்ணுலகில் வாழ்வமே

ஓடியோடி யுழைத்துநாம் ஒன்றொன்றாய் சேர்த்துமே
மாடிமேல் மாடிகட்டி மாண்புடனே வாழ்ந்தாலும்
ஓடியிந்த வுடலைவிட்டு உயிர்பிரிந்த பின்னாலே
நாடியிந்த இடத்தையே நம்முடலும் வந்திடுமே

நாடுவிட்டு நாடுசென்று நாமுழைத்துச் சேர்த்தாலும்
கூடுவிட்டு ஆவிபோனால் கூடவே வருவாரில்லை
மாடுமனை மக்களெலாம் மறுவழிக்கு வருவதில்லை
கேடுகெட்ட உடலுக்காய் கெடுவழியிற் செல்லவோ

நமக்கென்று ஒருபெயரிந்த நாநிலத்தில் இருந்தாலும்
தமக்கென்று சொத்துக்கள் தான்சேர்த்து வைத்தாலும்
சுமக்கின்ற பெயரதுவும் சேர்த்திட்ட சொத்துக்களும்
எமதுயிரும் போயிட்டால் எமக்கென்று ஆகாதே

மாடுமனை மக்களும் மண்ணுலக உறவுகளும்
கூடுகின்ற சொத்துகளும் கொண்டுசெல முடியாதே
வாடுகின்ற மக்களுக்கு வாரிவாரிக் கொடுத்துமே
தேடுகின்ற புண்ணியமே தொடர்ந்துடன் வந்திடுமே

அடுக்கடுக்காய் சொத்துக்கள் அதிகமாய் சேர்க்காது
வெடுக்கென்று பேசிநிதம் வெறுப்பையும் சேர்க்காது
அடுத்தடுத்த பிறப்பிலும் ஆனந்தமாய் வாழ்ந்திடவே
எடுத்துடனே நற்செயல்கள் எந்நாளும் செய்திடணும்.

வாதங்கள் புரிந்துமே வாழ்நாள் முழுதும்
ஏதங்கள் செய்து ஏட்டிக்குப் போட்டியாய்
பாதகம் புரிந்தோர் பாழுமுயிர் போயிடின்
பேதங்கள் இன்றியே உறங்குமிடம் ஈதாமே

# சகலரும் போற்றுவமே

வளம்பார்த்து வயலெடுத்து வாகாய் அதையுழுது
அளவாய் பசளையிட்டு அளந்துமே விதையெறிந்து
களத்திலே நின்றுநிதம் காவலும் காத்திருந்து
உளமாரப் பணிசெய்யும் உழவனைப் போற்றுவமே

விதைவிதைத்து உழுதுவிட்டு விண்ணின் நீர்சொரியுமென
பதைபதைத்து காத்திருந்து பரம்பொருளை ப்பார்த்துமே
கதைகள்பல கூறிநிதம் காத்திருந்த போதிலும்
விதைநிலத்து விளைவுகள் வீடுவந்து சேராதே

வேண்டும் வேளையில் வாராது வருத்திடும்
வேண்டாம் என்கையில் வெகுவாய்க் கொட்டும்
ஈண்டிந்த மழைசெய் இன்னல்கள் தன்னாலே
வேண்டாம் கமமென மனமதும் விரும்பிடுதே

விதைமுளைக்கும் வேளையில் வாராது கருக்கிடும்
விதைமுளைத்து வளர்கையில் வெகுவாய்க் கொட்டும்
விதைமுளைத்துப் பயிராகி விளைகதிர் வளர்கையில்
அதையழிக்க அதிகமாய் அவமெனவே பொழியும்

முளையாமல் ஒருபகுதி முன்னமே யழிந்திடக்
களையாலே ஒருபகுதி காணாமற் போயழிய
விளைகையில் விலங்குகளால் மேலும் சிலவழிய
விளைவாய் எஞ்சுவதில் விவசாயிக் கென்னசுகம்

சேற்றிலே தினமுழுது செம்மையாய் தானுழைத்து
நாற்றிட்டு வளர்த்தெடுத்து நாளெல்லாம் காத்திருந்து
ஏற்றுமுயர் பலனுக்காய் ஏக்கமுடன் பார்த்திருக்கும்
சாற்றுமுயர் உழவனையே சகலரும் போற்றுவமே

போற்றுவமே உழவனைப் புவனமதில் நாளும்
ஏற்றுவமே அவனை எந்நாளும் முயன்று
சேற்றினிலே இறங்கிச் செங்குருதி வியர்வையாக்கி
சோற்றுக்காய் உழைக்கும் தோழனாம் விவசாயி

# உழவன்

உழுது பயிரிட்டு உறுதியாய் காத்திருந்து
பழுது வாராமல் பார்த்துமே - அழுது
இலமென்று எண்ணி இருந்திடல் விடுத்து
நிலமிசை உழைப்பான் நீடு

சேற்றிலே உழன்று செந்நெல் விதைத்து
வீற்றிருந்து காக்கும் விவசாயி - ஆற்றாமல்
ஒருநாள் உறக்கம் கொள்வான் ஆயின்
கருவிலே அழியும் காடு

உழுதுண்டு வாழும் ஒப்பற்ற பணிக்குப்
பழுதில்லை யென்றும் பாரில் - தொழுதுண்டு
அடுத்தவன் பேச்சிற்கு அடிபணிய வேண்டும்
தொடுத்திடும் வேறோர் பணிக்கு

உழவுத் தொழிலையே உயர்வாய் எண்ணிக்
கழனியில் நாளுமே கலந்து - முழவடித்து
விலங்கினம் விரட்டி விளைவினைக் காப்பான்
தலம்புகழ் உழவுத் தலைவன்

சேற்று நிலந்தன்னைச் செம்மையாய் தானுழுது
நாற்று தனையொழுங்காய் நட்டுமே - தேற்றிட
நல்லுரம் தானுமிட்டு நாளுமே காப்பான்
பல்லுயிர் காக்கும் பயிர்க்கு

# ஆமையும் முயலும்

ஓட்டப் போட்டியில் ஆமையும் முயலும்
போட்டியிட்டது பழங்கதை தான்
நாட்டங் கொண்டுமே நன்கிதை ஆராயின்
நமக்கோர் உண்மை புலப்படுமே

ஊர்ந்து சென்றிடும் சின்னப் பிராணி
உற்சாகம் கொண்டது போட்டிக்கு
ஓர்மம் கொண்டுமே ஓடிச் சென்றுமே
ஒருபெரும் வெற்றியைக் கண்டதுவே

மூர்க்கமாய் முயலும் ஓடிய போதிலும்
முயற்சியை இடையில் விட்டதனாலே
தீர்க்கமாய் தோல்வியை தழுவியது தானே
தெய்வம் கொடுத்த தண்டனைதானே

வெற்றிகள் எமக்கு வேண்டும் எனில்
விரைந்துமே முயலுதல் வேண்டும்
சற்றுமே முயற்சி செய்யாமல் விட்டால்
சாற்றிடும் வெற்றி இயலாதன்றோ

சிந்தையும் செயலும் ஒன்றாதல் வேண்டும்
சிறந்த முயற்சி செய்திடல் வேண்டும்
முந்தை முறைகளை முயன்றிடல் வேண்டும்
முயற்சி செய்ய முயன்றிடல் வேண்டும்

செய்யும் செயல்கள் எதுவென்றாலும் அதைச்
சிரத்தை யுடனே செய்தல் வேண்டும்
எய்தும் இலக்கை எண்ணத்தில் கொண்டே
இலக்கை அடைந்திட முயலல் வேண்டும்

ஆமையும் முயன்றது வெற்றியும் கண்டது
அவனிக்கதுவே அறிவுரை ஆனது
நாமுமே முயல்வோம் நற்பணி செய்வோம்
நலம்பல பெற்றுமே வாழ்வோம்

# பரீட்சை

கல்வி கற்கும் மாணவர் தமக்கு
காலம் தோறும் பரீட்சை
நல்ல வாழ்க்கை வேண்டும் என்கில்
நாள்கள் தோறும் பரீட்சை

பதவி தன்னில் அமர்ந்து ளோர்க்கும்
பகுதி தோறும் பரீட்சை
உதவி செய்ய நினைப்போர் தமக்கு
உலகில் நாளும் பரீட்சை

குடும்ப வாழ்க்கை வேண்டு வோர்க்கு
குறைகள் அறியப் பரீட்சை
குடும்ப வாழ்வில் நுழைந்த பின்னர்
கூடும் நாளும் பரீட்சை

பருவத்து வயதை அடைந்து ளோர்க்கு
பாரில் நாளும் பரீட்சை
பருவத்து வயதை அடைந்த பின்னர்
பக்குவப் படுத்தப் பரீட்சை

பிள்ளை குட்டிகள் பிறந்த பின்னர்
பின்பும் தொடரும் பரீட்சை
கள்ளமில் அன்பு காத்திட வேண்டில்
காலம் தோறும் பரீட்சை

முதுமை வயதை அடைந்த பின்னர்
முழுதும் தொடரும் பரீட்சை
முதுமை நிறைந்து முடியும் வேளை
மூச்சை நிறுத்தப் பரீட்சை

வாழ்நாள் முழுதும் வாகாய்த் தொடரும்
வஞ்சனை இன்றியே வதைக்கும்
வீழ்நாள் வரையும் விரைந்து துரத்தும்
வேடிக்கை யாமிந்தப் பரீட்சை

# கஷ்டம்

கணவன் மட்டும் வேலைக்குச் சென்றால்
காலத்தை ஓட்டுவது கஷ்டம்
கணவன் மனைவி இருவரும் சென்றால்
குடும்பத்தை ஓட்டுவது கஷ்டம்

செலவுகள் செய்யப் பணமது போதாமல்
சிந்தை தளர்ந்திடல் வேண்டும்
செலவுகள் மிகையாய் ஆகியே போனால்
சேர்ந்திடும் அதிக கஷ்டம்

கணவன் சொல்லை மதியா மனைவி
காலம் தோறும் கஷ்டம்
குணவான் ஒருவன் அமையா விட்டால்
கொண்டவள் பாடு கஷ்டம்

தந்தை சொல்லை மதியாத் தலைமகன்
தரணியில் நாளும் கஷ்டம்
சந்ததம் கல்வியைத் தொடராச் சி'யன்
சான்றோர் தமக்குக் கஷ்டம்

அதிகாரி பேச்சைக் கேட்காது விட்டால்
அலுவலகம் நடப்பது கஷ்டம்
சதிகாரர் கூட்டம் சேர்ந்தே நின்றால்
சாதனை புரிவது கஷ்டம்

ஏட்டிக்குப் போட்டியாய் எதிர்த்துப் பேசினால்
என்றும் வாழ்வில் கஷ்டம்
நாட்டினில் கள்வர் நலித்துப் போனால்
நாநிலம் தளைப்பது கஷ்டம்.

பணிகள் இன்றியே பதவியில் இருப்பது
பாரினில் நாளும் கஷ்டம்
அணிகள் இன்றியே அடங்கி யிருப்பது
அரிவையர் தமக்குக் கஷ்டம்

மதியாச் சபையில் மிகுநாள் இருப்பது
மனதிற்கு என்றும் கஷ்டம்
மதியார் முற்றம் மிதித்திடல் வேண்டின்
மகிழ்ச்சி யுறுவது கஷ்டம்

# முகநூல்

கணனி யுகமிங்குக் காட்டிய நட்புவட்டம்
இணங்கிய உள்ளங்கள் இணையும் களமுற்றம்
கணத்தில் செய்தியெலாம் காசினியிற பரவிடவே
முணங்குடன் உலாவரும் முகநூல் உதவிடும்
(முணங்கு - அடக்கம்)

காலத்தின் கோலத்தால் கருதிய நட்பெலாம்
ஞாலத்தின் திசையெங்கும் நாடோடி யாயிருக்க
சீலமுடன் அவருறவை செகமதில் தொடர்ந்திடவே
காலமது நமக்கிங்கு கையளித்த பெட்டகமே

ஞாலத்தின் திசையெங்கும் நட்புவட்டம் விரிந்திடும்
ஆலமரம் போலிங்கு அவ்வட்டம் அகன்றிடும்
காலமெலாம் புத்துணர்வாய் களித்திடவே உதவிடும்
ஞாலமிசை நாம்கண்ட நல்லதொரு முகநூலே

நல்லதற்கு மட்டுமே நாமிதனை இயக்கிடணும்
அல்லதற்கு முயன்றுமே அவமானம் கண்டிங்கு
தொல்லை அடையாமல் தூய்மையாய் நடப்போம்
நல்லதோர் நட்பினர் நமக்கிதனால் கிடைப்பர்

இளவயது நண்பர்கள் இணையினையும் தேடலாம்
களமதில் சிற்சிலர் களவுகளும் செய்யலாம்
உளமார உத்தமராய் உலாவிடும் உறவுகளை
களமதில் கண்டிடவே கவனமாய் இருக்கணும்

நன்மையும் உண்டுத் தீமையும் உண்டிதனில்
நன்மையைத் தேடிநாம் நடைபயில வேண்டுமே
இன்னல்கள் தந்திடும் இழியுறவைத் தவிர்த்துமே
நன்மைகள் பெறவே நாமிங்கு முயல்வமே

பாலையும் நீரையும் பகுத்தறியும் அன்னம்போல்
நாலையும் பார்த்து நல்லதைத் தெரிந்தால்
மாலையாய் அணிந்து மனமதும் குளிர்ந்து
சோலையாய் எம்வாழ்வு சுகமே கண்டிடுமே

# அருமை

நிழலின் அருமை வெயிலிற் தெரியும்
நிறைமழை அருமை கோடையிற் றெரியும்
தழலின் அருமை குளிரிற் தெரியும்
தண்ணீரின் அருமை தாகத்திற் தெரியும்

மருந்தின் அருமை நோயிற் தெரியும்
மகவின் அருமை இலார்க்குத் தெரியும்
குருவின் அருமை கல்வியிற் தெரியும்
குளிர்மையின் அருமை வெம்மையிற் தெரியும்

அன்னையின் அருமை அன்பினில் தெரியும்
அப்பனின் அருமை பாசத்திற் தெரியும்
மன்னனின் அருமை மழையினிற் தெரியும்
மண்ணின் அருமை இழக்கையில் தெரியும்

இழப்பின் அருமை இழக்கையில் தெரியும்
ஈன்றவள் அருமை இலார்க்குத் தெரியும்
உழவனின் அருமை உணவதில் தெரியும்
ஊரின் அருமை உணர்வில் தெரியும்

படிப்பின் அருமை பரீட்சையில் தெரியும்
பாவலர் அருமை பாடலில் தெரியும்
நடிப்பின் அருமை நாடகத்திற் தெரியும்
நட்பின் அருமை பிரிகையில் தெரியும்

கடவுளின் அருமை கவலையிற் தெரியும்
கல்வியின் அருமை செவ்வியிற் தெரியும்
சுடர்களின் அருமை சூழலிற் தெரியும்
சுகத்தின் அருமை இழப்பில் தெரியும்

எண்ணத்திள் விளைவு ஏற்றத்திற் தெரியும்
ஏருழவின் அருமை எதிர்விளைவிற் தெரியும்
வண்ணத்தின் அருமை வரைதலில் தெரியும்
வார்த்தையின் அருமை பேசிடத் தெரியும்

காலத்தின் அருமை காத்திருப்பிற் தெரியும்
காதலின் அருமை பிரிகையிற் தெரியும்
ஞாலத்தில் இவற்றை நன்கறிய முடிந்தால்
ஞானமும் பெருக நல்வாழ் வுறலாமே

## தெரியும்

அகத்தின் அழகு முகத்திற் தெரியும்
ஆர்வத்தின் அழகு முயற்சியிற் தெரியும்
சுகத்தின் அழகு துணையிற் தெரியும்
சூழலின் அழகு தூய்மையிற் தெரியும்

படிப்பின் விளைவு பரீட்சையிற் தெரியும்
பாசத்தின் அழகு நேசத்திற் தெரியும்
அடியின் அருமை அணைப்பிற் தெரியும்
அனலின் அருமை குளிரிற் தெரியும்

நிழலின் அருமை வெயிலிற் தெரியும்
நேர்மையின் அருமை வெற்றியிற் தெரியும்
குழலின் அருமை குமரியிற் தெரியும்
குலத்தின் பெருமை செயலிற் தெரியும்

பிறப்பின் அருமை இறப்பிற் தெரியும்
பிழையின் அருமை விளைவிற் தெரியும்
அறத்தின் அருமை பயனிற் தெரியும்
அருகின் அருமை பிரிவிற் தெரியும்

தந்தையின் அருமை இலார்க்குத் தெரியும்
தாயின் அருமை தளர்கையில் தெரியும்
நிந்தையின் அருமை நிகழ்கையில் தெரியும்
நினைவின் அருமை மறப்பிற் தெரியும்

குருவின் அருமை கல்வியிற் தெரியும்
கூடலின் அருமை ஊடலிற் தெரியும்
தருவின் அருமை தண்ணிழலிற் தெரியும்
தகுதியின் அருமை செயலிற் தெரியும்

முயற்சியின் அருமை வெற்றியிற் தெரியும்
முன்னோர் அருமை முயன்றிடத் தெரியும்
உயர்ச்சியின் அருமை உழைப்பினிற் தெரியும்
உண்மையின் அருமை உணர்விற் தெரியும்

பதவியின் அருமை அமர்ந்தபின் தெரியும்
பணியின் அருமை இலார்க்குத் தெரியும்
உதவியின் அருமை உயர்ச்சியிற் தெரியும்
ஊரின் அருமை உணர்விற் தெரியும்

நட்பின் அருமை பகையிற் தெரியும்
நகையின் அருமை நாரியர்க்குத் தெரியும்
தட்பின் அருமை வெட்பிற் தெரியும்
தங்கையின் அருமை அண்ணனுக்குத் தெரியும்

மனிதத்தின் மாண்பு மனங்களிற் தெரியும்
மனைவியின் அருமை மனையிற் தெரியும்
இனிமையின் அருமை தனிமையிற் தெரியும்
ஈகையின் அருமை ஈகையிற் தெரியும்

தெரிவின் அருமை தெரிவினிற் தெரியும்
தென்றலின் அருமை தீண்டிடத் தெரியும்
பிரிவின் அருமை பிரிகையில் தெரியும்
பெறுகையின் அருமை பெற்றிடத் தெரியும்

தூண்டலின் அருமை துலங்கிடத் தெரியும்
தூய்மையின் அருமை சுகத்தினிற் தெரியும்
வேண்டலின் அருமை பெறுகையிற் தெரியும்
விருப்பின் அருமை வெறுப்பிற் தெரியும்

காதலின் அருமை காத்திருப்பிற் தெரியும்
கருணையின் அருமை கடிகையில் தெரியும்
மோதலின் விளைவு முடிந்தபின் தெரியும்
மோனத்தின் அருமை முயன்றிடத் தெரியும்

## போட்டி

நாளும் பொழுதும் நடைபெறும் போட்டி
நன்கிதை உரைப்பேன் நான்சுவை கூட்டி
வாழும் வரையில் வளர்ந்திடும் போட்டி
வகைதொகை இன்றியே தொடரும் போட்டி

பள்ளியில் நாளும் படிப்பினிற் போட்டி
பாலகர் வாழ்விற் பரீட்சையிற் போட்டி
துள்ளிடும் வயதில் விளையாட்டுப் போட்டி
தொடரும் வாழ்விற் தோன்றிடும் போட்டி

வாலிப வயதில் வாழ்க்கைக்குப் போட்டி
வாழ்வில் நாளும் வளர்ந்திடும் போட்டி
போலிகள் கூடிப் போட்டிடும் போட்டி
பொங்கிடும் உணர்வில் புலரும் போட்டி

பணியிடம் வந்தால் பதவிக்குப் போட்டி
பதவியில் அமர்ந்தால் பறித்திடப் போட்டி
அணியுளோர் தமக்குள் அதிகாரப் போட்டி
அகிலம் இதனில் தொடரும் போட்டி

தரணியை ஆளத் தலைவர்க்குள் போட்டி
தையலர் வாழ்வில் தலைவனுக்குப் போட்டி
விரகுளோர் தமக்குள் வித்துவப் போட்டி
வெற்றிடம் நிரப்பவும் விளங்கிடும் போட்டி

கன்னியர்க்கும் காளையர்க்கும் காதலிற் போட்டி
காக்கையின் இனத்தில் இல்லையே போட்டி
மன்னவர் தமக்குள் மமதையிற் போட்டி
மாந்தரின் வாழ்வில் எதற்கும் போட்டி

வீதியில் நாளும் விரைவோட்டப் போட்டி
வீதிவழிப் போவோர் விரைந்தழியப் போட்டி
மேதினி தன்னில் மேன்மேலும் போட்டி
மெதுவாய்க் கொல்லும் வாகனப் போட்டி

# நற்றமிழ்

அன்புடனே அம்மாவென அழைப்பதை விடுத்துமே
ஆங்கிலத்தில் மம்மியென்ன அழைக்கலுற்றார்
என்றுமுயர் தந்தையினை அப்பாவென் றழைக்காது
எடுத்துமே டாடியென உழைக்க லுற்றார்

செந்தமிழின் சுவையினைச் சிதைத்துமே விட்டார்
சிந்திக்கும் ஆற்றலினை இழந்து விட்டார்
அந்நியனின் மொழியினை அறிந்திடவே முயன்று
அழகு தமிழினையே அழித்தும் விட்டார்

முழுதாய் ஒருவார்த்தை முத்தமிழில் உரைத்திடார்
முப்போதும் பிறமொழியே பேசிடப் பயின்றார்
விழுதாய் பரவியிம் வியனுலகு தன்னிலவர்
வித்துவத் தமிழினையே விரித்திட மறந்தார்

உண்ணும் உணவிலும் உடுக்கும் உடையிலும்
உலக நடப்பையே உவப்புடன் ஏற்றார்
விண்ணும் புகழ்ந்திடும் விருப்புடைத் தமிழையே
வெறுத்துமே ஆங்கிலம் விரும்பிடல் உற்றார்

தூயதாம் தமிழினையே கேட்டிடல் அரிதாச்சு
துலங்கிடும் பிறமொழியே மேலோங்கல் ஆச்சு
ஆயதாம் பணிசெய்து அருந்தமிழ் தன்னையே
அரங்கினில் உயர்த்திட ஆனபணி செய்வமே

இயன்றவரை நற்றமிழில் இனிநாமும் உரையாடி
இன்றமிழின் பெருமையினை இவ்வுல குணர்த்துவோம்
முயன்றவரை வெற்றியது முகிழ்த்திடும் இதுவுண்மை
முத்தமிழும் புகழ்பரப்பும் மேலோங்கும் தானே

வணக்கம் சொல்லி வரவேற்கும் மனப்பாங்கு
வதை பட்டழிந்து போயாச்சு
இணக்கம் கொண்ட இன்றமிழ் அழிந்து
எங்கும் பிறமொழி கலந்திடலாச்சு

அந்நிய மொழியை அறிதலில் தப்பில்லை
அதனில் மூழ்கிப் போதலே தப்பு
செந்தமிழ் இனிமை சிந்தையது கொண்டே
செம்மொழி யாக்கிச் சிந்தையது மகிழ்வமே

# பொறுப்புடன் முயல்வோம்

மதுவினால் மாந்தர் மதிகெட்ட லைகின்றார்
மாண்பெலாம் இழந்து மனமது வருந்துகின்றார்
மதுவினால் மண்ணுலகில் மக்கள்படு துயரம்
மனமதிற் கொள்வோம் மாண்பதுவும் பெறுவோம்

குடியது குடியினைக் கெடுக்குமென் றுரைப்பார்
கூடிக்கூடியிங்கு கூக்குரலும் இடுவார்
கொடியது இதுவென்று கூக்குரலும் இடுவார்
குவலயத்தில் இதனை அழிப்போ மென்பார்

போதைதனை யொழிப்போமெனப் பொய்யுரைகள் புகல்வார்
பொறுப்பில் உள்ளோரும் தாமருந்தி மகிழ்வார்
போதையால் பலதுயரம் பொங்கிடும் என்றுரைப்பார்
போற்றியே பின்வழியால் போதைப்பொருள் விற்பார்

மதுவினால் மக்களெல்லாம் மடிகிறார் என்றுரைப்பார்
மதுபானச் சாலைக்கு அனுமதியும் கொடுப்பார்
மதுவினால் அழிவுகளே மலர்ந்திடும் என்பார்
மறைமுகமாய் அவரதனை ஊக்குவிப்பும் செய்வார்

போதைப் பழக்கம் போயகல வேண்டுமெனில்
பொசுக்கணும் இங்குள மதுபானச் சாலைகளை
போதையால் வருதுயரம் போக்கிட வேண்டுமெனில்
பொறுப்புளோர் அதற்கு முயன்றிட வேண்டும்

கஞ்சாவொடு அபினும் கடைகெட்ட கசிப்பும்
களிப்புடன் அருந்திக் கழிக்கின்றார் உயிரை
அஞ்சாமல் கொலையும் அடுக்கடுக்காய் கொள்ளையும்
அவர் செய்வதாலே அழிந்திடும் இந்நாடே

பள்ளிச் சிறார்க்கும் பழக்குகின்றார் மதுவை
பாதியில் படிப்பை முடிக்கப் பார்க்கிறார்
துள்ளித் திரியும் சிறார்கள் தம்மையே
தூண்டி விட்டுக் கூத்துப் பார்க்கிறார்

போதையற்ற வாழ்வே பொன்னான வாழ்வு
போதையால் என்றும் பேரழிவு தானே
போதையற்ற உலகினைப் பொறுப்பாய் உருவாக்க
பொறுப்புடன் நாமெலாம் முயன்றிடல் வேண்டும்.

# தாக்கியே அழிப்போம்

அடுத்தவரைக் கெடுத்தேனும் அமரணும் இதிலென்று
தொடுத்துப் பலபணிகள் செய்கின்றார் இம்மண்ணில்
அடுத்துப் பொய்பேசி ஆசைபலகாட்டி நிற்பார்
எடுத்ததும் பதவியினை எள்ளவும் மதிக்காரே

தொடுத்துக் கிடைக்கின்ற தொடர்சலுகை கண்டதுமே
எடுத்துக் கொடுத்தவரை ஏறெடுத்தும் பார்த்திடார்
அடுத்துப் பலதடவை அவரருகிற் சென்றாலும்
மிடுக்குடனே பதிலளித்து விரட்டுவார் எங்களையே

வரும்வரை வணங்கிடுவார் வந்தபின்னர் மறந்திடுவார்
உருப்படியாய் ஒன்றேனும் ஊருக்குச் செய்யமாட்டார்
தெருவெலாம் அலைந்துமே சேர்த்திடுவார் வாக்குகளை
பொருந்திய பின்னரெமை பொருட்டாய் மதித்திடார்

உற்றவர்க்கும் உறவினர்க்கும் உதவிகள் செய்வார்
மற்றவர்கள் தம்மையென்றும் மனதாலும் நினைத்திடார்
பெற்றிட்ட பதவியினால் பெரும்பலன் அடைந்திடவே
பற்றுடனே முயல்வார் பாரினில் உயர்ந்திடுவார்

அடுக்காய்ப் பலசலுகையும் ஆடம்பர வாழ்க்கையும்
தொடுத்துக் கிடைத்திடவே சொன்னதை மறந்திடுவார்
எடுத்துமே விளக்கினும் ஏறெடுத்தும் பார்த்திடார்
அடுத்துவரும் தேர்தலுக்காய் ஆயத்தம் ஆகிடுவார்

வாக்காளர் நாமெல்லாம் வாய்ஜாலம் செய்வோரை
போக்கிடவே முயலணும் பொறுப்பது நமதாமே
தீக்குள்ளே விரலிட்டால் தீண்டிடும் நமையென்று
தூக்கியே வீசிடணும் துட்டரைத் தானின்றே

வாக்கு வேட்டைக்காய் வாய்ஜாலம் பேசிடுவார்
போக்குவோம் துயரென்று பொய்பலவும் பேசிடுவார்
தேக்கியே வாக்குகளை சேர்த்திடவே முயன்றிடுவார்
தாக்கியே அழிப்போம் தன்னலம் காப்போரை

# வருவிருந்தோம்பும் தென்மராட்சி

வந்தாரை வாழவைக்கும் வளமார் தென்மராட்சி
வருவிருந் தோம்பும் வண்ணமது காண்பீர்
சிந்தையது குளிர்ந்திடச் சீரியநல் வார்த்தைகளால்
சிறப்புடன் வரவேற்றுச் சேர்த்தணைத்து மகிழ்வர்
சிந்தாகுலம் இல்லாமல் சிரித்தநல் முகத்துடனே
செய்வன திருத்தமாய்ச் செய்துமே மகிழ்வர்
எந்தையரும் தாயுமிங்கு எமக்களித்த சிறப்புகளை
ஏரகம் எங்குமே எடுத்தியம்பி நிற்பர்

கனிதரும் சோலைகளும் கவினுறுவயல் வெளிகளும்
காசினியில் எம்பெருமை காற்றோடு பரப்பிடும்
தனியாள் வீட்டினுளும் தாங்குநற் கூடைகளில்
தானியங்கள் என்னாளும் தன்னிறைவாய் காணுமே
நனிசுவை நல்கிடும் நற்பனையின் பயன்களாகும்
நல்லபுழுக் கொடியலும் நற்பனாட்டு மீங்கே
நனிமிகை யாகவெம் நற்குடிலில் தானுண்டு
நாநிலத் தோர்க்கிவை நற்பயன் நல்குமே

கோர்க்காலி மீதினிலே குந்தியுள்ள கூடைகளில்
குரக்கனொடு பயறும் குத்தரிசி வகையுமுண்டு
மோர்ப்பானை நிறைந்துள மோருடன் தயிருமுண்டு
முற்றத்தில் நல்லநல்ல முக்கனி மரங்களுண்டு
போர்க்கால வேளைகளில் பொலிவிழந்த சோலையெலாம்
புத்துயிர் பெற்றிங்கு பூரித்துக் குலுங்கிடும்
ஊர்நிறைந்த கோவில்களில் உயர்வான பூசையெலாம்
உளமாரக் கண்டிங்கு உயர்வினைக் காணலாம்

வாசலிலே கோலமிட்டு வாழையிலை தனிலங்கு
வாகாய் நிறைகுடத்தை வைத்துமே வரவேற்று
நேசமுடன் உபசரிக்கும் நேர்த்தியைக் காணவிங்கு
நேத்திரங்கள் பல்கோடி வேண்டும் நமக்கிங்கு

பேசரிய வார்த்தைகளைப் பெருமகிழ்வாய் கூறியிங்கு
பெருமையுடன் அமர்த்திப் பெருவிருந்து படைப்பர்
கூசாமல் உணவுண்டு குதூகலம் கண்டிடலாம்
கூடிக்கதை பலவும் பேசியே களித்திடலாம்

தலைவாழை தனையிட்டுத் தானதிலே நீர்தெளித்து
தளிர்க்கரத்தால் உணவளிக்கும் தையலவர் தமது
விலையிலா நற்பண்பை விரைந்துமே காண்பீர்
விதவிதமாய்க் கறிபலவும் விரும்பிய கூட்டுகளும்
கலையுணர் வோடிங்குக் கச்சிதமாய்ப் பரிமாறி
கறுப்பனரிச் சோற்றோடு கைநிறைய நெய்யுமிட்டு
விலையிலா அன்பாலே விருந்துண்ண அழைத்திடுவர்
விண்ணவர் தாமுமிதை விரும்பியே உண்பர்

## தென்மராட்சி மண்ணெங்கள் மண்ணே

தென்மராட்சி மண் எங்கள் மண்ணே
தென்னை பலாமலிந்த ஊரே
அன்புடனே அரவணைக்கும் எங்கள் மண்ணே
ஆலயங்கள் பலமலிந்த ஊரே
என்றுமுயர் பண்பாலே ஏற்றமுறும் மண்ணே
ஏரகத்தோர் போற்றுமுயர் ஊரே
நன்குயர்ந்த நற்றமிழ் நடைபயிலும் மண்ணே
நாநிலம் போற்றுமுயர் ஊரே

சீரிலங்கா புரியதன் சிரமெனவே ஓங்கிடும்
சிறப்புறு யாழ்நகரின் தென்பாலே
தேர்ச்சியுறு தமிழறிஞர் செழித்துவளர் மண்ணே
தென்மராட்சி மண்ணெங்கள் மண்ணே
சேர்ந்துழவுப் பயிர்செய்து செழிப்பிக்கும் மண்ணே
செந்தமிழும் செழித்தோங்கும் ஊரே
பார்புகழும் கலைஞர்கள் பரந்துவாழ் மண்ணே
பட்டறிவால் உயர்ந்தவெம் ஊரே

பரப்பளவால் உயர்ந்துள தெங்கள் மண்ணே
பாதியதில் வயல்நிலங்கள் தானே
சிரத்தையால் உயரும் எங்கள் மண்ணே
சிவபூமி எனப்பெறுமெம் ஊரே

உரங்கொண்ட நெஞ்சத்து உழவருள்ள மண்ணே
உழவாலே உயருமெங்கள் ஊரே
வரம்புடை வரன்முறையால் வளருமெம் மண்ணே
வண்டமிழர் நிறைந்துளதெம் ஊரே

சுற்றிவர நீரேரி சூழ்ந்துளதெம் மண்ணே
சுந்தரத் தமிழ்வளரும் ஊரே
பெற்றுள வளமதால் பெருமையுறும் மண்ணே
பெரும்பரப்பு கொண்டவெம் ஊரே
தற்றுணிபு கொண்டே தழைத்திடும் மண்ணே
சமயங்கள் பலவுமுள ஊரே
சுற்றிவர ஆலயங்கள் சூழ்ந்தவெம் மண்ணே
சோதனைகள் பலகண்ட ஊரே

பனங்கிழங்கு பனாட்டால் பயன்பெறும் மண்ணே
பருவகாலப் பயிர்வளரும் ஊரே
தனம்பெருக கனிமரங்கள் தான்வளரும் மண்ணே
தரமுயர் கல்விவளர் ஊரே
இனப்பண்பு மேலோங்கும் இன்றமிழ் மண்ணே
ஈகையால் உயருமெம் ஊரே
வனப்புடை வயல்நிலங்கள் வளருமெம் மண்ணே
வந்தாரை வாழவைக்கும் ஊரே

செந்தமிழர் தான்நிறைந்த செம்மையுறும் மண்ணே
சேர்க்கையால் உயருமெம் ஊரே
சந்ததமும் உழைத்துயர் சான்றோருள மண்ணே
சகமெங்கும் புகழுடை ஊரே
வந்தனையே செய்துவளர் வளமுயர்ந்த மண்ணே
வருபுகழ் ஓங்குமெங்கள் ஊரே
சிந்தித்துச் செயலாற்றும் சீர்மையுள்ள மண்ணே
சிறப்புற் றோங்குமெம் ஊரே

## பாகுபாடு

பாரினில் உள்ள பாகுபாடு பாரீர்
பாங்குடன் உரைப்பேன் பற்றுடன் கேண்மின்
பேரிடர் நல்கும் இந்தப் பாகுபாடு
பெட்புடன் பகர்வேன் பிரியமாய் கேண்மின்

ஆணும் பெண்ணும் அலியுமென்று ஆங்கே
அழகாய்ப் பாலியலில் ஒரு பாகுபாடு
பேணும் தொழிலைப் புரியும் வகையால்
பேதங்கள் காட்டிட ஒரு பாகுபாடு

பேசும் மொழியினில் பெருமை காட்டிப்
பிரித்தே காட்டுவர் ஒரு பாகுபாடு
காசும் பொருளும் சேரும் வகையால்
காட்டுவார் அங்கும் ஒரு பாகுபாடு

பணியிடந் தன்னில் பதவியைக் காட்டிப்
பகுத்தே காட்டுவார் ஒரு பாகுபாடு
அணியிழை தம்மையும் அழகுறும் வகையால்
அமைத்தே காட்டுவர் ஒரு பாகுபாடு

இயல் இசை நாடகம் எனப் பிரித்தாங்கே
இன்றமிழ் தன்னில் ஒரு பாகுபாடு
செயல்புரி வகையால் செகத்தினில் ஆங்கே
செப்புவர் சிறந்த ஒரு பாகுபாடு

திறமை காட்டிச் செயற்படச் செய்யவே
திறனாய்ந்து தருவர் ஒரு பாகுபாடு
திறமை காட்டிச் செயற்பட்ட போதும்
செல்வாக்கு காட்டும் ஒரு பாகுபாடு

பணியிடந் தன்னில் பற்பல வேளைகளில்
பாடாய்ப் படுத்தும் இந்தப் பாகுபாடு
பணிந்தே அடங்கிப் போயிட வேண்டிப்
பணித்துமே பகுப்பர் ஒரு பாகுபாடு

மூத்தோர் இளையோர் முனைப்பான சேவை
முடித்தோர் இவரென ஒரு பாகுபாடு
ஏத்தியே பதவியில் உயர்வுகள் தந்திட
எடுப்பர் இயைபாய் ஒரு பாகுபாடு

தகுதியும் திறமையும் வேண்டும் என்பர்
தாமே அதனை மீறவும் செய்வர்
தகுதியும் திறனும் இல்லை யென்றாலும்
தம்மவர் தமக்கே தருவர் உயர்வு

திறமை யுள்ளோர் தம்மவர் இன்றேல்
தெரிந்தே காட்டுவர் ஒரு பாகுபாடு
திறமை இலாதோர் தம்மவர் ஆயின்
தெரிந்திடக் காட்டுவர் ஒரு பாகுபாடு

அகப்பை பிடிப்பவன் தன்னாளாயின்
அடிப்பந்தி என்ன நுனிப்பந்தி என்னவென
இகத்தில் நடக்கும் இழிசெயல் உரைத்திட
இன்றமிழில் உள்ளதொரு பழமொழியே

அதிகாரப் பதவியில் அமர்ந்துளோர் எங்கள்
அன்புளோர் என்னில் ஆனந்தம் தானே
மதியற்று இருப்பினும் மண்ணுலகு தன்னில்
மதிப்புளோர் ஆகவே மாண்புறல் ஆமே

## மாற்றங்கள்

மங்கல நிகழ்வெலாம் மனைகளில் நிகழ்த்தாமல்
மண்டபத்தில் நிகழ்த்திடும் நிலையும் இன்றாச்சு
எங்களவர் பண்பாடு எல்லாமும் போயகன்று
ஏதேதோ முறையெலாம் இடம்பெறலாச்சு

ஒத்தாசை புரிந்திட ஊரொன்று கூடியே
ஒப்பேற்றும் காலமும் மலையேறிப் போச்சு
ஒத்தாசை தேவையில்லை ஒன்றுகூடத் தேவையில்லை
ஒப்பேற்ற மண்டபங்கள் ஊரெல்லாம் உண்டு

முற்கூட்டி அறிவித்து முற்பணமும் கட்டிவிட்டால்
முழுதும் குறைவின்றி முடித்தவர் வைப்பார்
உற்றவர் புடைவர உரியநாட் சென்றமர்ந்து
உரியவிழா முடித்தேகும் நிலையு மின்றாச்சு

பந்தற்கால் நாட்டும் பழக்கமும் போயாச்சு
பலகாரம் சுட்டிடும் பழக்கமும் அகன்றாச்சு
வந்தமரும் உறவுகட்கு வழங்கிடப் பலகாரம்
வாகாய்ப் பொதிகளில் வந்திறங்கும் காலமாச்சு

உற்றார் தம்மொடு ஊரவரும் ஒன்றுகூடி
உணவாக்கும் முறையதும் உலககன்று போச்சு
பற்றுடனே யறிவித்துப் பணமதும் கட்டிவிட்டால்
பாங்காய்ப் பொதிகளில் உணவுவரும் நாளாச்சு

பந்தமும் போயாச்சுப் பாசமும் போயாச்சுப்
பாரினில் எல்லாமும் பணத்துக்காய் ஆனது
சொந்தமும் தேவையில்லை சுற்றமும் தேவையில்லை
செல்லிடப் பேசியொன்று செய்திடும் எல்லாமும்

தலைவாழை இலைபோட்டுத் தானியமாம் நெல்லிட்டுத்
தகுநிறை குடம்வைத்த தன்மையும் மாறிடிச்சு
நிலையான தட்டமதில் நீள்பச்சை அரிசியிட்டு
நிறைகுடம் வைத்திடும் நிலையும் இன்றாச்சு

வாசலிலே தொங்குகின்ற வடிவான மாவிலையும்
வாகாய் தயாராக விற்பனைக்கும் வந்தாச்சு
போசனம் அளித்திடவே பொலிவாய் அளித்திடும்
புகழ்மிகு வாழையிலை போயகன்று நாளாச்சு

உண்ணீர் உண்ணீரென்று உவகையுடன் உபசரித்து
உணவளிக்கும் பண்பாடு ஊரகன்று போனது
தண்ணீர் வழங்கிநற் தலைவாழை தனையிட்டுத்
தரையமர்த்தி உணவளிக்கும் தன்மையும் போயாச்சு

வாழையிலை தானின்று வடிவான தட்டமாச்சு
வாகாய்க் கையிலேந்த வசதியாய் ஆச்சு
வாழையிலைச் சாப்பாட்டை வாய்ருசிக்க நாமுண்ட
வண்ணமும் போயகன்று வருடம் பலவாச்சு

சுற்றிவர வாழையிலையில் சுவைநிறை கறிகளிட்டு
சுந்தரமாய் நடுவினிலே சோற்றையும் தானிட்டு
பற்றுடனே பருப்பினைப் பரவிநடுவில் விட்டுமே
பாங்கொடு நெய்யுடன் பரிமாறும் காலமகன்றது

ஓடியோடி உபசரித்து உவந்ததை தானளித்து
உணவளிக்கும் முறையின்று என்னாச்சு
தேடிப்போய் தட்டெடுத்து தெரிந்துணவு தானெடுத்து
தெவ்வரைப் போலுண்ணும் நிலையாச்சு(தெவ்வர்-பகைவர்)

உண்டீரா உணவும் உவப்பாய் இருந்ததுவோ
உரைப்பீர் எனவோடி உசாவிடும் நிலையில்லை
தண்டமிழர் பண்பாடு தானழிந்து போயாச்சு
தரணி நடப்போடு தானொன்றிப் போயாச்சு

மண்ணுலகில் என்றும் மாற்றங்கள் வேண்டும்
மாண்புகள் இழந்திடா மாற்றமாய் வேண்டும்
விண்ணுலகும் போற்றியே வியந்திடும் வகையில்
விளைவுகள் அதனால் விளைந்திடல் வேண்டும்

வளர்ந்து வரும் நாகரிகம் வசதிகளைப் பெருக்கிட
வழக்கழிந்து போகுதிங்கு வண்டமிழர் பண்பாடு
வளர்ச்சியின் போக்கிலே வழக்கத்தை மாற்றுகின்றார்
வருந்திப் பயனென்ன வருவதை ஏற்போமே

## இல்லையே பெண்ணடிமை

ஆணினால் பெண்ணிங்கு அடிமைப் படுவதாய்
அரிவையர் மொழிகின்றார் அதிசயம் பாரீர்
வீணினில் முரண்டிங்கு மேதினி தன்னில்
விளைவுகள் அறியா முயற்சிகள் செய்கின்றார்

அந்தநாள் தன்னில் அரிவையர் தமக்கிங்கு
அருங்கல்வி இல்லை மறுப்பதற்கு இல்லை
இந்தநாள் அந்நிலை இங்கில்லை என்பதனை
இந்நிலம் அறியும் இதுவுண்மை தானே

ஆதிக்கம் செலுத்துகின்றார் அரிவையர் மீதிலென
அறியாமல் அவரிங்கு அரற்று கின்றார்
ஆதிக்கம் செய்வது அரிவையர் தாமெனவே
அறியாமல் அவரிங்கு ஆர்ப்பரிக் கின்றார்

பணியிடந் தன்னில் பதவிகள் தன்னிலே
பாதிக்கும் மேலே பாவையர் தானே
பணிந்து ஒடுங்கிய பாவையர் எல்லாம்
பதவியில் அமர்ந்து பரிணமித்தனரே

சுதந்திரம் வேண்டும் சுந்தரியர் தமக்கெனச்
சூழலை மறந்து சூதானம் இழந்து
நிதமிங்கு முயன்றுமே நிம்மதியும் இலாது
நிறைதுயர் அடைகின்றார் நிஜமிது தானே

தரையத் தொடுமென வளர்ந்த கூந்தல்
தலையொடு மட்டுமே தரித்தும் விட்டது
தரையைத் தொடவே தழையக் கட்டிய
தானையும் இன்று சரிபாதி யாயிற்று

உடலை இறுக்கும் உடைகள் அணிந்து
உலவியே வருகின்றார் ஊர்திகள் தன்னில்
படலை தாண்டாப் பாவையர் எல்லாம்
பறக்கிறார் விண்வெளி பாரினில் காண்பீர்

பட்டங்கள் பெற்றார் பதவிகள் பெற்றார்
பாராளும் மன்றிலும் அமர்ந்துமே விட்டார்
சட்டங்கள் கற்றார் சரித்திரம் படைத்தார்
சமர்க்களம் தன்னிலும் தானவர் வென்றார்

அரிவையர் தமக்கிங்கு ஆறுதல் அளித்திடவே
ஆயிரம் அமைப்புகள் அகிலத்தில் உண்டு
தெரிவையர் தமக்குத் தேறுதல் அளித்திடவே
தேவைக் கதிகமாய்ச் சட்டங்கள் உண்டு

எங்களை அடக்கியே ஏய்க்கிறார் இவரென
எகிறிக் குதிக்கும் பெண்ணினத் தவரே
உங்களை உணர்வீர் உண்மையை அறிவீர்
உயர்ச்சியே காண்பீர் உண்மை யிதுதானே

இங்கில்லைப் பெண்ணடிமை இதுவுண்மைதானே
இங்குள்ளோர் இதனை உணரணும் நன்றே
எங்ஙனும் சுதந்திரம் ஏரகத்தில் உண்டு
ஏந்திழையோர் இதனை ஏற்றிடணும் நன்றே

# பிறந்தநாள்

பிறந்தநாள் தன்னைப் பெரிதும் மகிழ்வாய்ப்
பிரியமுடன் கொண்டாடும் பிள்ளைகாள் கேண்மின்
பிறந்தநாள் எதுவெனப் பெரியோர்கள் கேட்பின்
பிழையிலாப் பதிலைப் புகன்றிடல் வேண்டும்

நம்தமிழ் முறையில் நாம்பிறந்த நன்னாளின்
நட்சத்திரம் கொண்டே பிறந்தநாள் காண்பர்
எம்தமிழ் முறையை எடுத்தெறிந்து நாமின்று
எப்படிப் பிறந்தநாள் கொண்டாடு கின்றோம்

ஆங்கிலத் திகதியை ஆதியாய்க் கொண்டே
அழகாய்ப் பிறந்தநாள் கொண்டாடு கின்றோம்
பாங்குடன் மெழுகுதிரி பற்றவைத்து அணைத்துமே
பற்றுளோர் வாழ்த்தக் கொண்டாடு கின்றோம்

கூடியே உற்றார் குதூகலித்து இருக்கக்
குழந்தைகள் கூடிக் கும்மாளம் அடிக்க
நாடியே நம்மை நாமலங்கரித் தழகாய்
நலமுடன் பிறந்தநாள் கொண்டாடு கின்றோம்

ஆலயம் சென்று அகவை நன்னாளில்
அர்ச்சனை செய்யும் நிலைய ழிந்தாச்சு
மேலவர் தங்கள் பண்பாட்டு ஒழுங்கில்
மேலாய்ப் பிறந்தநாள் கொண்டாடு கின்றோம்

ஒளிவீசிப் பிரகாசம் காண்கிற வேளையில்
ஒளியினை அணைத்துமே ஆரவாரம் செய்கின்றோம்
ஒளியினை ஏற்றிநற் பிறந்தநாள் கொண்டாட
உவந்தே நாமும் விளைந்திடல் வேண்டும்

பெரியோர் பாதம் பணிந்தெழுவ தில்லையவர்
பேச்சைக் கேட்கும் வழக்கமும் இல்லை
பெரிதாய்க் கொடைகள் கொடுப்பதும் இல்லை
பேணிப் பிறரை மதிப்பதும் இல்லை

பிறந்த நன்னாளில் பெருமையுடன் நாமும்
பிறருக் குதவிகள் புரிந்திடல் வேண்டும்
சிறப்புடன் நாடதும் செழிப்புற் றோங்கிட
சீரிய மரங்களை நாட்டிடல் வேண்டும்

மூத்தோர் பாதம் பணிந்தே யவரிடம்
முறையாய் ஆசிகள் பெற்றிடல் வேண்டும்
மூத்தோர் தங்கள் முன்னறிவுத் திறத்தால்
முகிழ்க்கும் அறிவுரை கேட்டல் வேண்டும்

பெற்றவர் பாதம் பணிந்திடல் வேண்டும்
பேணியே அவரைக் காத்திடல் வேண்டும்
நற்றவத் தோராய் வாழ்ந்திடல் வேண்டும்
நாநிலம் போற்றும் நிலையினைப் பெறணும்

நன்றாய் இவற்றை மனத்தினில் இருத்தி
நற்செயல் செய்துநாம் வாழ்ந்திடுவோம்
குன்றாய் இந்தக் குவலயம் தன்னில்
குதூகலம் கொண்டுமே வாழ்ந்திடுவோம்

## கொடுமை

கொடியவை எவையெனக் குமரவேளுக் கன்று
கூறியே வைத்தாள் கூனற் கிழவி
படிமுறை ஆகவே பகுத்தும் காட்டிப்
பாரினில் அன்றே பகன்றும் விட்டாள்

அவ்வை அறியாக் கொடுமைகள் பலவும்
அவனியில் உண்டென அறியத் தருவேன்
செவ்வை ஆகவே செந்தமிழ் தன்னில்
செப்பிட முயலச் சித்தமும் கொண்டேன்

தாய்மண் மறத்தல் தாய்மொழி துறத்தல்
தரணியில் இவையும் தாங்கொணாக் கொடுமை
சேய்கள் இன்றியே செகத்தினில் வாழ்வது
செப்பிட முடியாக் கொடுமை தானே

வேண்டும் போதே கிடையாப் பொருளும்
வேண்டாப் போதில் மிகைவரு பொருளும்
காண்பார் இல்லாக் கவிஞன் பாட்டும்
காசினி தன்னில் கொடுமை தானே

பணிகள் இன்றிப் பணியிடத் திருப்பதும்
பைந்தமிழ் மொழியிற் பிறமொழி கலத்தலும்
அணிகள் இன்றியே அரிவையர் இருப்பதும்
அவனியில் மிகவும் கொடுமை தானே

கடன் தொகையோடு வாழுதல் கொடுமை
கருவிகள் துணையொடு வாழுதல் கொடுமை
உடன் பட்டநெஞ்சம் உடைந்து போதலும்
உலகினில் நாளும் கொடுமை தானே

பழகிய நட்புப் பாதியில் பிரிதலும்
பாரினிற் பாரிய கொடுமை தானே
பழகிய உறவுகள் பிரிந்து போதலும்
பகர்ந்திட முடியாக் கொடுமை தானே

மொழியைப் பிழையாய் எழுதும் முறைமை
மொழியே பேசிட முடியா நிலைமை
பழியைப் பிறர்மேல் செலுத்தும் தன்மை
பாரினில் இவையும் கொடுமைகள் தானே

செம்மொழி எனவே செப்பிடும் செந்தமிழ்
செகத்தினில் அழிவது கொடுமை தானே
தம்மொழி மறந்து பிறமொழி போற்றுதல்
தரணியில் நாளும் கொடுமை தானே

மூத்தோர் தம்மை மதியாச் செயலும்
முகிழ்த்து வளரும் கொடுமை தானே
மூத்தோர் வார்த்தை முற்றிய வேதமிதை
முழுதும் உணர்ந்தால் மேன்மை தானே

ஆன்றோர் அறிஞர் அவனியில் மூத்தோர்
அறிவுரை கேட்டே அமர்தல் சிறப்பு
ஈன்றோர் வார்த்தை என்றும் மதித்தல்
இகத்தினில் ஓங்கியே உயர்ந்திடச் செய்யுமே

## உழவர் வாழ்வில் மறையும் சடங்குகள்

தேர்ந்தெடுத்து நன்னாளில் விதைவிதைப் பதில்லை
தெரிந்து நாளெடுத்து கதிரறுப்பதில்லை
பார்த்தெடுத்து நன்னாளில் பலரொன்று கூடியே
புத்தரிசிச் சோறுண்ணும் புதுமையும் இல்லை

நெல்குற்ற நாள்பார்க்கும் நெறிமுறையும் இல்லை
நெல்லவிக்க நன்னாளை நாடுவதும் இல்லை
நல்விதமாய் களப்பொங்கல் பொங்குவதும் இல்லை
நலமுடன் களப்பிச்சை நல்குவதும் இல்லை

பாட்டுகள் பாடியிங்கு பணிசெய்வார் இல்லை
பலரொன்று கூடும் பான்மையும் இல்லை
கூட்டமாய் பணிசெயக் குவலயத்தில் யாருமில்லை
குறையின்றி இயந்திரங்கள் பணியாற்றும் நாளாச்சு

வடக்கன் மாடில்லை வண்டிகளும் தானில்லை
வாகாய் வயலுழும் வழக்கமும் இல்லை
படங்கில் போட்டுழக்கிப் பக்குவமாய் சூடடிக்கும்
பழக்கமும் இம்மண்ணில் பறந்தேகிப் போச்சு

வகைவகையாய் இயந்திரங்கள் வந்திறங்கி யாச்சு
வயல்வேலை எல்லாமும் இயந்திரத்தால் ஆச்சு
தொகைவகையாய் ஆட்களிங்கு தேவையில்லை எமக்கு
தொலைபேசி ஒன்றிங்கு தொடந்திடும் வேலைகளை

வெட்டுதற் கொன்றும் அடிப்பதற் கொன்றும்
வெட்டி யடிப்பதற்கு வேறொன்று மாயிங்கு
பட்டென வேலைகளை பாங்குடனே முடித்திடும்
பக்குவமாய் நெல்மணியும் மனைவந்து சேரும்

நெல்தூற்றக் குல்லத்தை நாடுவார் இங்கில்லை
நெல்தூற்றும் வழக்கமும் நெடுநாளாய் இங்கில்லை
நெல்வெட்டும் இயந்திரமே நேர்த்தியாய் எல்லாம்
நிறைவேற்றி வைத்திடும் நிலையிங்கு தானே

அக்கறையாய் வயல்வெளியில் அரிவிதனை வெட்டுவோர்க்கு
அன்னமிடும் வழக்கமும் இங்ககல லாச்சு
பக்குவமாய் பனையோலை பதப்படுத்திக் கோலியதில்
பாங்காய் உணவளிக்கும் பழக்கமும் போயாச்சு

தக்கநற் கறிகளுடன் தட்டுவத்தில் உணவுண்ணும்
தன்மையும் அகன்றிங்கு தானழிந்து போச்சு
எக்கணமும் தயார்நிலையில் இருக்கின்ற தட்டுகளில்
இட்டுண்ணும் வழக்கமே இங்குவரல் ஆச்சு

வளர்ந்துவரும் தொழினுட்பம் வசதிகளைப் பெருக்கியது
வாழ்க்கை முறையெல்லாம் வழக்கழிந்து போச்சு
உளம்நிறை மகிழ்வும் உடல்நலத் தேர்ச்சியும்
உலகத்தில் இன்றிங்கு உடைந்திடல் ஆச்சு

## மங்கையர் வாழ்வில் மறையும் பழக்கங்கள்

அம்மியில் அரைப்பதில்லை ஆட்டுக்கல் தொடுவதில்லை
அற்புதமாம் திரிகையினை அறிவாரும் இங்கில்லை
நம்மரிய மனைகளிலே நல்லுரல்கள் தானுமில்லை
நல்லுழைப்பு இங்கு நம்மவர்க்குத் தானில்லை
எம்மரிய முன்னோர்கள் எடுத்துரைத்த வழிமுறையை
இந்நாளில் கடைப்பிடிக்க இளையோரும் தயாரில்லை
தம்முடலை வருத்தாது தரும்பணிகள் முடித்திடவே
தம்பியரும் தங்கையரும் தான்விரும்பு நாளாச்சே

உடலுழைப்பு இங்கில்லை ஒற்றுமையும் தானில்லை
உலகொப்ப வாழ்கின்றார் உவகையை இழக்கின்றார்
உடலெங்கும் நோய்களொடு உள்ளமும் மிகவாடி
உழல்கின்றார் இம்மண்ணில் உண்மை இதுதானே
உடனிருந்து வதைத்தெடுக்கும் நீரிழிவு தன்னோடு
உயரழுத்த நோயும் உண்டிங்கு எமக்காமே
உடலெங்கும் கொழுப்பு உட்படியும் அதனாலே
உயர்நோயும் உண்டிங்கு உண்மைதானே

பனங்கிழங்கைப் பக்குவமாய் பதப்படுத்தி ஒடியலாக்கி
பாங்குடன் பிட்டவிக்கும் பழக்கமும் போயாச்சு
மனமொத்து உறவொன்றாய் மணத்திடவே கூழாக்கி
மகிழ்ந்திருந்து அருந்திடும் மகத்துவமும் போயாச்சு
பனம்பழத்தைப் பிழிந்தெடுத்துப் பனாட்டாய் அதைவார்த்து
பக்குவப் படுத்தும் பழக்கமும் போயாச்சு
பனம்பழச் சாறெடுத்துப் பலகாரம் சுட்டுண்ணும்
பழக்கமும் இன்றிங்கு பட்டழிந்து போயாச்சு

கரும்பனையால் விழுகின்ற காவோலை தனைக்கிழித்து
கச்சிதமாய் அடுப்பெரித்து கரிசனையாய் வார்த்து
பெருஞ்சுவை யாய்த் தோசையினைச் சுடுவாரும் இல்லை
பேதையர்க் கிதனில் பெருவிருப்பு மில்லை
அருகும் பழக்கங்கள் அகன்றொழிந்து போயிட்டால்
ஆரோக்கிய வாழ்வும் அகன்றிடும் தானே
பெருமுண்மை யிதனையிப் பேதையர்கள் உணர்ந்தால்
பெருமின்பம் பெறலாம் பேருண்மை யிதுதானே

# செல்லிடப் பேசி

செல்லிடப் பெசியொன்று செய்திடும் வேலைகளைச்
செப்புவேன் நானின்று செந்தமிழிற் தானே
நல்லதும் செய்யும் கெட்டதும் செய்யும்
நாமிங்கு கையாளும் நடைமுறையிற் தானே

நடந்திடும் நிகழ்வுகளை நாடறியச் செய்யும்
நல்லுதவி செய்யும் நண்பனாம் இதுவே
கடந்திடும் காட்சிகளைக் காணொளி யாக்கியே
காசினி பரப்பிடும் காரியமும் செய்யும்

நல்லநாள் பெருநாளில் நல்வாழ்த்தும் உரைக்கலாம்
நட்புவட்டம் பெருகிட முகநூலும் பார்க்கலாம்
சொல்லரிய வலைப்பின்னல் வசதியும் காணலாம்
சொந்தங்கள் தம்மோடு உரையாடி மகிழலாம்

உலகெங்கும் பரந்துள்ள உறவினர் தம்மோடு
உறவினைப் பெருக்கிட உறவாடி மகிழலாம்
நலமெங்கும் பெருக்கும் நண்பனாய் உதவிடும்
நமக்கென்றும் உதவும் நற்கரமாய் இருக்கும்

காலத்தைக் காட்டிடும் கடிகாரமும் உண்டு
கணக்குகள் செய்திடும் வசதியும் உண்டு
ஞாலத்தைக் கைகளில் நடமாட வைத்திடும்
நலங்கள் பலவுமிச் செல்பேசி வழங்கிடும்

இத்துணைச் சிறப்புள இப்பேசி தன்னையே
எம்மவர் கையாளும் நிலையிங்கு பாரீர்
தத்தமது கைகளில் தாங்கியுள பேசியுடன்
தனிமையில் அமர்ந்துமே தானேதோ செய்கிறார்

உந்துருளி தன்னிலவர் உலவுகின்ற போதிலும்
உறங்கிடச் செல்கின்ற வேளையது தன்னிலும்
நந்தமிழர் பண்பாட்டு நிகழ்வுகளின் போதிலும்
நம்மவர் கைகளில் செல்பேசி தானே

தலைக்கவசம் தனிற்செருகித் தான்விரைந்து செல்வார்
தன்னரிய உயிரையே பணயமும் வைப்பார்
விலையற்ற மனிதவுயிர் வீணழிந்து போவதற்கு
வித்தாகும் தானிந்த விளையாட்டுச் செயலே

ஆண்டவனைத் தரிசிக்க ஆலயம் செல்கையிலும்
ஆங்கவர் கைகளில் செல்பேசி தானே
ஈண்டிவர் செல்பேசி எழுப்பிடும் ஒலியதால்
என்றும் இடையூறு ஏற்படும் தானே

அழைப்பு மணியொலியை அதியொலியாய் வைப்பார்
அடுத்தவர்க் கிடையூறு தருவதை உணரார்
இழைத்திடும் இச்செயல் இழிசெயல் எனவேயவர்
எந்நாளும் உணரார் இதுவுண்மை தானே

முகநூலைப் பார்த்தபடி மூழ்கியதில் இருப்பார்
முற்றும் புறச்சூழல் தனைமறந்து போவார்
தகவலைப் பரப்பிடவே தான்வந்த செல்பேசி
தவறான உறவுகளைத் தந்திடவும் கூடும்

வல்லுறவுக் கொடுமை வன்கொலைகள் நடப்பதற்கும்
வக்கிர வுணர்வுகளை வளர்த்துமே விடுவதற்கும்
நல்லுறவு அகன்றிங்கு நாடழிந்து போவதற்கும்
நம்மவர்க் கிப்பேசி நன்குதவி செய்திடுதே

செல்பேசி எனுமிந்தத் தொலைபேசி தன்னையே
செம்மையாய் பயன்படுத்த சீராய் முயலனும்
இல்லையெல் இப்பேசி தொல்லைபேசி ஆகியெமை
இழிவடையச் செய்யும் இதுவுண்மை தானே

# பத்திரிகைத் தொகுப்புக்கள்

1. நல்லைக்கந்தன் புகழ்மாலை
2. ஏனையவை

# 1. நல்லைக் கந்தன் புகழ்மாலை

## கூடிடக் கொடியேறுதே

வேட்டொலிகள் மறைந்து வீண்பகையை மறந்து
கூட்டுறவாய் மாந்தர்கள் குதூகலமாய் வாழும்
நாட்டத்தைக் கொண்டேன் நல்லைப் பதியினில்
நாட்டமுடன் அடியார் கூடிடக் கொடியேறுதே

நல்லடியார் ஒன்றுகூடி நல்லையம் பதிவந்து
அல்லல் அகற்றியே அருளும் அழகனுக்கு
சொல்லியநல் நேரத்திற் சோராது கொடியேற்றி
நல்லருள் பெற்றிடும் நாளதும் இன்றாமே

## உனக்கின்று கொடியேற்ற விழாவாமே

சீர்பூத்த யாழ்ப்பாணத் திருப்பதியே மேவும்
சிவபூமி எனமிளிரும் நல்லூரில்
பேர்பூத்த சித்தர்கள் பெருமையுடன் தோன்றிய
பேசரிய புகழ்மிக்க தலமதனில்
பார்பூத்த நல்லடியார் பலரொன்று கூடியே
பாங்குறும் உன்புகழ் பாடிடவே
ஊர்ஏத்த உவந்துறையும் உமை மைந்தா
உனக்கின்று கொடியேற்ற விழாவாமே

## ஏதமகற்ற ஏறுதுபார் கொடி

காதலொடு அடியார்கள் கரங்குவித்து வணங்க
நாதமொடு வாத்தியங்கள் நல்லிசையே பரப்ப
மாதரிருவர் மகிழ்ந்துடனே வீற்றிருந்தே அருள
ஏதமகற்ற ஏறுதுபார் எழில்வேலவன் கொடி

நற்றமிழின் நாயகனே நான்மறையின் உட்பொருளே
கற்றவர்கள் போற்றிடும் கலியுகனே கந்தனே
நற்றவத்தோர் போற்றிடும் நல்லையம் பதியமர்ந்த
கொற்றவனே யுனக்கின்று கொடியேற்ற விழாவாமே

## வேலெடுத்து நீயும் வீசு

வஞ்சகமாய்ப் பேசியே வாழ்வினை அழிக்கும்
வஞ்சகரை யெங்குமே தேடி -அஞ்சாது
காலெடுத்துக் கயவரைக் கருவுடனே யழிக்க
வேலெடுத்து நீயும் வீசு

பச்சிளம் பாலகரைப் பாலியல் ரீதியில்
இச்சிக்கும் ஈனரை யழிக்க - கச்சிதமாய்
காலெடுத்து வந்து கனல்விழிகள் சிவக்க
வேலடுத்து நீயும் வீசு

யாழ் தினக்குரல் -2014.08.02

## நல்லறம் தன்னையே நாட்டு

நல்லூராம் பதிமேவும் நாயகனே முருகா
வெல்லவரும் பகைவிரட்டும் வேலவா - தொல்லுலகில்
எல்லையில் துயரங்கள் எல்லாமும் ஒழித்து
நல்லறம் தன்னையே நாட்டு

நெடிதுயர்ந்த வேலுடைய நிர்மலனே முருகா
கொடியேற்ற விழாவே கண்டு - மிடியகற்றி
பல்லறங்கள் ஓங்கிப் பாருளோர் பயனுறவே
நல்லறம் தன்னையே நாட்டு

## பல்லாண்டு வாழப் பணி

நல்லையம் பதியமர்ந்த நாதனே சண்முகனே
தொல்லைகள் அகற்றிடும் தூயனே - எல்லோரும்
அல்லல்கள் அகன்று ஆனந்தம் பெருகியே
பல்லாண்டு வாழப் பணி

கொல்லவந்த பகையெல்லாம் வேல்கொண்டு கூறாக்கி
நல்லருளே நல்கிடும் நாதா - நல்லுலகோர்
இல்லையே துயரென்று இப்புவி தன்னில்
பல்லாண்டு வாழப் பணி

## கூர்வேலால் நீயுங் குறி

அப்பனுக்கு உபதேசம் அன்றுரைத்த அழகா
தப்பழிக்க வேலெடுத்த தலைவா - இப்பாரில்
வேர்கொண்டு வளரும் வீண்பகை யழிக்கவுன்
கூர்வேலால் நீயுங் குறி

வஞ்சியர் இருவர் இருபாகமும் அமர்ந்திட
நெஞ்சம் மகிழும் நெடியோய் - நஞ்செனப்
பார்மேல் பரவிடும் பகையெலாம் பறக்கவுன்
கூர்வேலால் நீயுங் குறி

## சப்பை ரதமேறி யருளே

இப்பாரில் உன்னடியை இனிதுதொழ வேண்டித்
தப்பாமற் சார்வார் தமக்கு - அப்பனே
தொப்பை யப்பனின் சோதரனே சண்முகா
சப்பை ரதமேறி யருளே

நல்லூரின் நாயகனே நலமருளும் நாதனே
பல்லோரும் போற்றும் பதியே -அல்லலின்றி
இப்பாரில் உள்ளோர் இனிதாய் வாழ்ந்திடவே
சப்பை ரதமேறி யருளே

குறவள்ளி மணாளா குன்றிலமர் வேலவா
விறல்வேல் கொண்ட வேந்தே - சிறப்பாய்
அப்பனுக் குபதேசம் அன்றருள் செய்தவா
சப்பை ரதமேறி யருளே

அவ்வைக் கிழவிக்கு அன்றருள் செய்தவா
தெவ்வரை அழித்துத் துடைத்துமே - இவ்வுலகில்
தப்பாமல் வந்துந்தன் தண்ணளியே காட்டிச்
சப்பை ரதமேறி யருளே

## தண்ணருளே தந்தருள வேண்டும்

சப்பை ரதமேறிச் சகத்துளோர் மனமகிழ
சாந்தமாய் வலம்வரும் சண்முகா
இப்பாரி லுன்னடியாரி ன்னலின்றி வாழ
எப்போதும் நீயருளல் வேண்டும்
அப்பனுக் குபதேசம் அன்றருள் செய்த
அண்ணலே எங்கள் ஆறுமுகா
தப்பாது ன்னடியே சார்ந்திடு மெமக்குத்
தண்ணருளே தந்தருள வேண்டும்

## நல்லூரிற் குடியமர்ந்த பெருமாளே

எல்லையில் துயரங்கள் எங்குமே சூழ்ந்து
ஏரகத்தார் துவளுகின்ற போதும்
வெல்லவரும் பகையழிக்க வேலெடுத்து வீசி
வேண்டும் வரமருள வேண்டும்
தொல்லைகள் பலவும் சூழ்ந்துமே கூடித்
துவண்டுமே துடித்துச் சுழலும்
நல்லுலகோர் தமைக்காக்க நனி வேலெடுத்து
நல்லூரிற் குடியமர்ந்த பெருமாளே

## சிந்தித்தே வேலைச் செலுத்து

பாரோங்கு புகழ்படைத்த பைந்தமிழ் நல்லையிலே
சீரோங்க வீற்றிருக்கும் செவ்வேலா - போரோங்கி
நற்றமிழர் தேசமிங்கு நலிவடையும் நிலையகலச்
சிந்தித்தே வேலைச் செலுத்து

உதயன்- 2001.07.31

## நல்லூரான் திருவடியை நாடு

ஏழ்மையிலும் ஏற்றமுடன் எதிர்நீச்சல் போட்டு
வாழ்ந்திருந்த வீடிழந்து வாடிடும் - பாழ்மனமே
சொல்லொணாத் துயரகன்று சோபன வாழ்வுபெற
நல்லூரான் திருவடியை நாடு

வலம்புரி -2001.07.27

## சந்ததமும் சாந்தியே தா

நிந்தனது திருவடியே நிதமுஞ் சரணமென்று
வந்தனையே செய்தேன் வடிவேலா - எந்தனது
வாழ்வது பயனற்றுப் பாருளோர் தூற்றிப்
பாழ்பட்டுப் போகாமற் பார்

கனலில் கருவாகிப் புனலில் உருவாயென்
மனதில் குடிகொண்ட மன்னவா - தினமும்
உந்தனது திருவடியே உளமாரப் பற்றினேன்
சந்ததமும் சாந்தியே தா

கோடி கோடியாய் உந்தன் கோவிலைநாடிக்
கூடிப் பணிகின்றார் குமரா - தேடிப்
பேறு பதினாறும் பெற்றுயர்ந்து இம்மண்ணில்
ஊறின்றி வாழ உரை

எத்தனை துயரம் என்வாழ்வில் வந்தாலும்
சித்தம் தளராது சிரிக்க - நித்தம்
உந்தனருள் வேண்டும் உரிமையுடன் கேட்பேன்
கந்தனே வந்து கார்

நமது ஈழநாடு- 2003.08.24

## ஆணவந் தன்னை அழி

வெங்களமாடி வீணரை அழித்திட்ட வேலா
எங்களவர் திருந்தி ஏற்றமுற - பங்கமில்
வேணவாக் கொண்டேன் வேலெடுத்து வீசியவர்
ஆணவந் தன்னை அழி

அடுத்தவரை மதியார் ஆணவங் கொண்டே
அடுத்துக் கெடுத்து அலைவார் - வடுக்கொண்ட
வீணர்கள் தம்மேல் வேலெடுத்து வீசியவர்
ஆணவந் தன்னை அழி

வலம்புரி - 2013.09.01

## நல்லருளை நீயும் நல்கு

அசுரர்செய் கொடுமையினால் அல்லலுற்ற அமரருக்காய்
பசும்பொன் வேலெடுத்த பாலகா - நீசரினால்
இல்லிடம் விட்டகன்று இன்னலுற்றோர் தமக்காய்
நல்லருளை நீயும் நல்கு

உதயன் -2001.08.05

## நல்லூரா நின்னருளை நல்கு

உதிரமதை வியர்வையாக்கி உழைத்துவாழும் நிலையகன்று
மதியற்ற மாற்றான் பொருள்பறித்து - நிதமிங்கு
வல்லோர் கொடுமையினால் வாடுவோர் துயரகல
நல்லூரா நின்னருளை நல்கு

வலம்புரி - 2001.07.29

## வந்தித்து அவனடியே வணங்கு

தொடர்ந்து வருயுத்தம் தொலைந்துமே போயகன்று
தடம்பதித்த துயரகன்று தாய்மண்ணில் -திடமுடனே
செந்தமிழர் வாழுநிலை செவ்வேலா தாவென்று
வந்தித்து அவனடியே வணங்கு

வலம்புரி - 2001.07.28

## நன்னெறி நீயுமிங்கு நாட்டு

வழிப்பறி கொள்ளையொடு வல்லுறவுக் கொடுமைகளும்
வழிவழியாய் தொடருதையா வடிவேலா - பழிபோட்டு
உன்னடியேசரணமென உளமாரத் துதித்தோம்
நன்னெறியை நீயுமிங்கு நாட்டு

வலம்புரி - 2001.07.31

# நல்லருளை நல்கு

வாயினில் சுடுசொல் வாராதிருக்க உந்தன்
கோயிலை நாடிக் கும்பிட்டேன் - நாயினும்
கேவலமாய் என்னைக் கீழ்ப்படுத்தினாலும் எந்தன்
நாவடக்க நல்லருளை நல்கு

பச்சை மயிலேறிப் பவனிவரும் பாலகனே
இச்சையுடன் ஒன்றை இரப்பேன் - இச்சகத்தில்
நாத்திகர் என்னை நசுக்கினும் எந்தன்
ஆத்திரம் தன்னை அடக்கு

நல்லூரில் வாழும் நாதனே கந்தா
எல்லோரும் என்னை எடுத்தெறிந்து - நில்லாது
இல்லாத பழிச்சொல் இயம்பினாலும் எந்நாவால்
பல்லாண்டு வாழ்த்தப் பணி

உதயன் -2003.08.09

# நல்லூரான் திருவடியை நாடு

எல்லையில் துன்பம் எல்லாமே அகன்று
பல்லாண்டு நீயும் பாரதில் -தொல்லையிலா
நல்வாழ்வு வாழ்ந்து நலம்பெற வேண்டுமெனில்
நல்லூரான் திருவடியை நாடு

போரது ஓய்ந்துமே புலர்ந்த சமாதானம்
ஏரகத்து என்றும் நிலைத்திட - தேரடியில்
சித்தர்கள் தோன்றிய சீர்நல்லைக் குமரனை
பத்தியுடன் நாடிடுவோம் நாம்

உதயன் - 2013.08.23

## நல்லறம் தன்னையே நாட்டு

நல்லூராம் பதிமேவும் நாயகனே முருகா
வெல்லவரும் பகைவிரட்டும் வேலவா -தொல்லுலகில்
பல்லறங்கள் ஓங்கிப் பாருளோர் பயனுறவே
நல்லறம் தன்னையே நாட்டு

வலம்புரி -2014.08.01

## கந்தனே நீயும் காத்தருள்

அதிகாரம் எமதென்று ஆணவத்தில் ஆடும்
சதிகாரர் தம்மைச் சரித்துமே - கதியென்று
உந்தனடி நாடிடும் ஊர்மக்கள் தம்மையே
கந்தனே நீயும் காத்தருள்

அலங்காரக் கந்தனென அகிலமே போற்றி
நலம்பெற நாளுமே நாடிடும் - தலமிதனில்
நம்பிக்கை கொள்ளும் நல்லடியார் என்றும்
செம்மையாய் வாழ்வர் சிறந்து

யாழ் தினக்குரல் -2014.08.08

## நல்லூரான் திருவடியை நாடு

சித்திபுத்தி பாகற்குச் சோதரராய் வந்து
முத்திதந்து அருளும் முருகனின் - சித்திநிறை
நல்லருளைப் பெற்றுமே நாநிலத்தில் உயர
நல்லூரான் திருவடியை நாடு

சங்கரனார் திருமகனாய்ச் சரவணப் பொய்கையில்
பங்கமின்றிப் பிறந்த பாலகனே - இங்கிதமாய்
வெல்லவரும் பகையெலாம் வீறுகொண் டழிக்க
நல்லூரான் திருவடியை நாடு

வலம்புரி -2014.08.08

## நல்லூரா சரணம்

வந்தாரை வாழவைக்கும் வளமார் தென்மராட்சி
இந்நாளில் படுதுயரை இன்செவியில் ஏற்றுநீ
சிந்தாகுலம் தீரவருள் செய்வாய் எனநம்பி
வந்தோம் உன்பாதம் வல்லோனே அருள்வாய்

நல்லூராம் பதியினிலே நல்லாட்சி செய்யும்
வல்லோனே வேலோனே வருவாயருள் தருவாய்
எல்லோரும் இன்புறவே எங்கள்துயர் நீக்கி
நல்வாழ்வு தருவாய் நல்லூரா சரணம்

வலம்புரி

## சப்பை ரதமேறிச் சாற்று

உள்ளொன் றிருக்கப் புறமொன் றுரைப்பார்
கள்ளமில் மனத்துக் கயவர் -தள்ளியே
இப்பாரில் இனியவர் இல்லாமற் போவரெனச்
சப்பை ரதமேறிச் சாற்று

நித்தம் உன்னாமம் நினைந்துருகி யுரைப்போர்
தத்தம் குறைநீங்கித் தரணியில் - தித்திக்க
முப்போதும் உயர்ந்து முத்தியது காண்பரெனச்
சப்பை ரதமேறிச் சாற்று

வலம்புரி - 2013.09.03

## பல்லாண்டு வாழப் பணி

நகைமுகங் கொண்டுலவு நல்லைக் குமராவெம்
பகைமுகம் எல்லாம் பறந்திட - வகையாய்
நல்வழி காட்டி நலமெலாம் நல்கியே
பல்லாண்டு வாழப் பணி

உள்ளொன்று புறமொன்றாய் உறவாடும் உலகோர்தம்
கள்ளத்தைக் காட்டிக் காப்பாற்றி -தெள்ளிய
நல்லறிவு தந்திந்த நாநிலம் தன்னில்
பல்லாண்டு வாழப் பணி

உதயன் -2013.08.27

## பல்லாண்டு வாழப் பணி

ஆயிரம் ஆயிரமாய் அடியார்கள் திரண்டுன்
கோயிலை நாடிக் கும்பிட்டே -தாயினும்
மேலான வுன்னருள் வேண்டுவார் அவர்க்கே
வேலாவுன் னருளை விதை

நல்லையில் அமர்ந்து நல்லாட்சி நல்கும்
வல்லவேற் குமராவிவ் வுலகில் - எல்லோரும்
எல்லாமும் பெற்று இன்பமே கண்டு
பல்லாண்டு வாழப் பணி

வலம்புரி - 2013.08.26

## செல்லிடம் எதுவெனச் செப்பு

நல்லூரில் நடமாடும் நம்பனே சண்முகா
எல்லாம் இழந்து இன்னலுற்று - தொல்லுலகில்
இல்லிடம் தனையிழந்து இன்னலுறும் யாம்
செல்லிடம் எதுவெனச் செப்பு

சொல்லாடிக் கைலையிலே பிரணவப் பொருளுரைத்து
நல்லூரிற் குடிகொண்ட நாதா - எல்லோரும்
தொல்லைகள் இல்லாத் தூயவாழ்வு பெறச்
செல்லிடம் எதுவெனச் செப்பு

நாடிவரும் உன்னடியார் நாகரிகப் போர்வையிலே
ஆடிவரும் கூத்தினையே அழிக்க - ஓடியே
நல்லுரைகள் பெற்று நன்மைகள் தேடிடவே
செல்லிடம் எதுவெனச் செப்பு

உதயன் -2010.09.04

## ஆய்ந்தொரு முடிவை அருள்

நல்லையில் இருந்திங்கு நல்லாட்சி செய்யும்
வல்லோனே வள்ளி மணாளா - நல்லுலகில்
எல்லையில் இன்பம் எல்லோரும் காண
நல்லருளை நீயும் நல்கு

போருடன் எம்முடைமை போயகன்று விட்டதன்னை
ஆருடன் கதைப்போம் ஆறுமுகா - வேருடன்
சாய்ந்தின்று தமிழரெலாம் தரமிழந்து போகாமல்
ஆய்ந்தொரு முடிவை அருள்

பட்டதுயர் போதுமையா பன்னிருகை வேலவா
விட்டகுறை யெதுவென விளம்பு - இட்டமுடன்
அக்குறையை நீக்கி அடிபணிவோம் உன்னிடம்
எக்குறையும் வாராது இயம்பு

நமது ஈழநாடு- 2003.08.18

# 2. ஏனையவை

## கடன்படக் கூடாது காண்

கடனில்லாக் கஞ்சி கால்வயிறு போதும்
மடமயிலே நீ மொழியாய் - உடனிருந்து
முடமாக்கி யெம்மை முனியாக்கு மிந்தக்
கடன்படக் கூடாது காண்

செலவுக் கேற்பச் செவ்வனே வருமதி
நிலவுமே யானால் நிம்மதி - நிலவுலகில்
வரவினைச் செலவு மேவுமே யாமாகில்
திரண்டுமே அழிக்குந் திகை

செய்தொழில் எதிலும் சீர்பெறும் இலாபம்
எய்திடின் என்றும் ஏற்றம் - பொய்யாகிக்
கையிலே நட்டம் காணுமே யாமாகில்
போயிடும் என்றும் புகழ்

வட்டிக்குக் கடன்வாங்கி வருந்தேவை தீர்த்தால்
முட்டியே யெம்மை முடமாக்கும் - வட்டிதான்
மூச்சினைப் பறித்தெமை முழுமோச மாக்கிடும்
தீச்சுவாலை என்றே தெரி

திடங்கொண்ட ராவணனும் செருக்களத்து நின்றநிலை
கடன்பட்டார் நெஞ்சம் போலாமே - மடமானே
திடமாய் முடிவைச் சிந்தித்தே யெடுப்போம்
கடன்படக் கூடாது காண்

- உதயன்-சஞ்சீவி 1999.04.24

# தகுந்தவிலை பேண வேண்டும்

அரிசியதைப் பெற்றெடுக்கும் நெல்லம்மா- அதன்
அதிவிலையைக் குறைக்கச் சொல்லம்மா
பெரிதுயரும் விலையதனால் நெல்லம்மா- நாம்
பெருந்துன்பம் அடைகின்றோம் பாரம்மா

அடுக்கினிலே வைத்திருந்தால் நெல்லம்மா- அந்த
அரிசிவிலை உயர்ந்திடுமா சொல்லம்மா
கெடுக்கவென வந்துதித்தோர் நெல்லம்மா- நிதம்
கேளாமல் உயர்த்திடுவார் விலையம்மா

கல்லும்மணலும் கலந்திடுவார் நெல்லம்மா - அன்றிக்
காற்படியைக் குறைத்திடுவார் நெல்லம்மா
சொல்லும்செயலும் வேறாவர் நெல்லம்மா-அவர்
சுகமாய் வாழலாமோ சொல்லம்மா

நலன்புரிய வேண்டுமென நெல்லம்மா- அவர்
நற்பணி புரிவமெனச் சொல்வரம்மா
நலன்புரிவர் தமக்கேதான் நெல்லம்மா -அவர்
நாநிலத்தில் இருப்பதேனோ சொல்லம்மா

பொதுப்பணிக்கு வந்திட்டால் நெல்லம்மா- என்றும்
பொதுப்பணியே எண்ண வேண்டுமம்மா
பொதுப்பணியை விட்டின்று நெல்லம்மா -அவர்
புதுப்பணிகள் செய்கின்றார் நெல்லம்மா

அரிசியினால் அடைதுயரம் நெல்லம்மா -அதை
அளந்திடக் கருவியில்லை நெல்லம்மா
அரிசிவிலை குறைந்திடவே நெல்லம்மா -என்றும்
ஆக்கப்பணி செய்திடவே வேண்டுமம்மா

அரைவயிறும் கால்வயிறும் நெல்லம்மா -நாம்
அருந்தியுயிர் வாழலாமோ சொல்லம்மா
கரையில்லா விலையேற்றம் நெல்லம்மா -எப்போ
காணாமற் போகுமோ சொல்லம்மா

கல்லொடு மண்கலந்து நெல்லம்மா- அவர்
காற்படி வெட்டுவார் பாரம்மா
நல்லநிலை அரிசியினை நெல்லம்மா- நாம்
நானிலத்திற் காண்போமோ சொல்லம்மா

அரிசிக்கும் உண்டோ தடையம்மா - நீ
அநியாய விலையுயர்வு குறையம்மா
தரிசிப்போம் உன்றனையே நாமம்மா- என்றும்
தகுந்தவிலை பேண வேண்டுமம்மா

- உதயன்-சஞ்சீவி - 1999.10.23

## வஞ்சக உறவுகள் வேண்டாம்

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடும்
உறவுகள் எனக்கு வேண்டாம்
கள்ளமில் மனத்தொடு கருணை காட்டும்
காதல் உறவுகள் வேண்டும்

நரம்பிலா நாக்கால் நாலையும் பேசிநிதம்
நடித்திடும் உறவுகள் வேண்டாம்
வரம்பிலா அன்பொடு வாழ்வெலாம் என்னை
வழுத்திடும் உறவுகள் வேண்டும்

சொல்லொன்று செயலொன்றாய் சூதும் வாதுமாய்
சுழலும் உறவுகள் வேண்டாம்
நல்லன்பொடு நாளும் நாநிலம் மீதினில்
நகரும் உறவுகள் வேண்டும்.

அடுத்தவர் பேச்சே அமுத வாக்கென்று
அரற்றும் உறவுகள் வேண்டாம்
கடுதுயர் வரினும் கருத்துடன் பேணும்
காதல் உறவுகள் வேண்டும்

கர்வம் கொண்டு கருத்தின்றிக் கடுவார்த்தை
கக்கிடும் உறவுகள் வேண்டாம்
சர்வமும் பிறர்க்கே சந்ததம் தந்திடும்
சத்திய உறவுகள் வேண்டும்

சொன்னசொல் பேணாமல் சொந்தமும் பாராமல்
சுற்றிடும் உறவுகள் வேண்டாம்
தன்னிகரில் அன்பொடு தன்னலம் கருதாமல்
தரித்திடும் உறவுகள் வேண்டும்

நடந்த பாதைதனை திரும்பிப் பாராது
நடந்திடும் உறவுகள் வேண்டாம்
கடந்த நிகழ்வெலாம் கருத்தினிற் கொள்ளும்
காதல் உறவுகள் வேண்டும்

வதம்புரி வார்த்தைகள் வழங்கிடும் நாவுடை
வஞ்சக உறவுகள் வேண்டாம்
இதம்தரு வார்த்தைகள் இயம்பிடும் நாவுடை
இன்முக உறவுகள் வேண்டும்

- உதயன் 1998

# எப்போதான் தீருமோ

சித்திரைப் பெண்ணேவருக சிறப்பெலாமிங்கு தருக
நித்தமும் நல்வாழ்வு நிலைத்திட அருள்வாயே
இத்தரையில் என்றும் இன்னமைதி தருவாயே
சித்திரையாளே வருக சிறப்பெலாமிங்கு தருக

வெடியோசை யோடிங்கு வேட்டொலிகள் கேட்டு
துடிதுடித்து துவளுகின்ற துயரநிலை அகலாதோ
மிடியகன்று நாமெல்லாம் மகிழ்வோடு வாழ்ந்திடவே
வெடியோசை அகன்றிங்கு வெண்புறா பறந்திடாதோ

களவோடு கொள்ளையும் காவாலித் தனங்களும்
அளவின்றிப் போயின அல்லல்தான் பெருகினவே
வளமான வாழ்விங்கு வந்தடைய வாழ்த்தியே
வளமோடுவருவாயே வணங்குகின்றோம் வியப் பெண்ணே

இடம்பெயர்ந்து நாம்பட்ட இன்னலெலாம் இனியும்
தொடருமா வெனவிங்கு துவளுகின்றோம் நாமெலாம்
முடமான எம்வாழ்வை முனைப்போடு புதுப்பிக்க
தொடருமா சமாதானம் சொல்வாயே வியப் பெண்ணே

புத்தாடை புதுவணிகள் புத்துணர்வுக் கொண்டாட்டம்
இத்தரையில் நாமெப்போ இனிமையாய்க் காண்பது
எத்தனையோ சித்திரைகள் எதிர்வந்து போயினவே
இத்தரையில் அமைதியது எப்போதான் திரும்புமோ

நமது ஈழநாடு-2006.04.14

## தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ

செங்களமாடிச் செங்குருதி தனைச் சொரிந்து
செந்தமிழர் படுதுயரந் தீர்ந்திடாதோ
வெங்களமாடும் நிலையது மாறி யிங்கினி
வேதனையிலா தொழியும் நிலையது வாராதோ
எங்களவர் இனமிணைந்து ஏற்றமுற வாழும்
எழிலார் யுகமொன்று எதிர் வந்திடாதோ
தங்கிடாமற் துயரகன்று தரணியிலே நாமுயரத்
தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ

எத்தனையோ பொங்கலிங்கு எதிர்வந்த கன்றது
இத்தரையில் விடிவெமக்கு இன்னுந்தான் வரவில்லை
சித்திரையாள் வந்தாள் செப்பிடா தகன்றாள்
சீராய் எமக்கெதுவும் தந்திட மறந்தாள்
நித்தமும் போர்வெறியில் நின்றுழலும் நிலைமாறி
நிலையமைதி எமக்களிக்க நீயின்று வருவாய்
சத்தம் எதுவுமின்றிச் சமாதானத் தீர்வோடு
தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ

வலம்புரி -2000.01.14

## பரப்புவோம் பைந்தமிழை

அன்னை தமிழையும் அரசகரும மொழியென்று
முன்னை ஆட்சியில் முகிழ்த்தொரு சட்டமாச்சு
என்னை அநியாயம் எங்களவர் தங்களது
சின்னத் தனத்தாலே சீரழியும் சட்டமாச்சே

தென்னகத்துக் கடிதங்கள் சிங்களத்தில் வருகுதென்று
என்னாளும் முழங்குகின்றார் ஏனிந்த வெளிவேசம்
ஒன்றும் தமிழ்தனில் ஒருநாளும் இவரெழுதார்
என்றிந்த நிலைமாறி ஏற்றுவார் தமிழதனை

அந்நிய மொழியாரோடு அளவளாவ வேண்டுமெனில்
செந்தமிழ்விடுத்தொரு தேர்ந்தமொழி பேசிடலாம்
இந்நிலத் துதித்தெழும் இன்றமிழர் எம்முடனும்
அந்நிய மொழியிலா அளவளாவ வேண்டும்

அரசகருமம் அனைத்தும் அன்னை தமிழதனில்
கிரமமாய் நாமாற்றிக் கீர்த்திபெற வைப்போமே
சிரமத்தை நாமெவர்க்கும் சிறிதும் வைக்காமல்
பரப்புவோம் பைந்தமிழை பார்மீது எந்நாளும்

அன்றாடம் கையாளும் அலுவலகக் கோவைகளை
என்னாளும் தாய்மொழியில் எழுதிடப் பழகிடுவோம்
இன்பரசத் தமிழ்மொழியே இகமெங்கும் பரப்பிடுவோம்
தன்னிகரில் லாமல்நாம் தாய்மொழியை வளர்ப்போம்

நமக்குள் உரையாட நந்தாய் மொழியிருக்க
நமக்கேன் பிறர்மொழி நவிலும் பெரியோரே
சமத்துவம் மொழிக்குண்டு சாற்றிட உரிமையுண்டு
எமக்கேன் வீண்வேலை என்றிடல் கூடாதே

எத்தனை மொழிகளில் எமக்காற்றல் இருந்தாலும்
இத்தரை மீதினில் எம்மவர் தம்முடன்
முத்தமிழ் மொழிதனில் முயன்றுரை யாடிடுவோம்
சித்தமது களித்திடும் சீருடன் முயலுவோம்

ஆங்கிலமும் சிங்களமும் அருந்தமிழில் கலந்தாக்கால்
போங்காணும் நீரென்று போயிடும் தமிழ்மொழியே
ஓங்கியினி வளர்ந்திடவே ஒருபுதுமொழி தோன்றும்
ஏங்கும் தமிழுள்ளம் என்றுமிது உண்மையே

உதயன்-சஞ்சீவி 1999.07.10

## கதியிழந்து போனமையா

சொந்த இடம் விட்டு வந்தோம்
சொத்துசுகம் துறந்து வந்தோம்
பந்தங்களை விட்டு வந்தோம்
படுந்துயரந் தீர்வதெப்போ

சகதிவழி நடந்து வந்தோம்
சார்ந்த துயர் கொஞ்சமில்லை
அகதியெனப் பெயர் பெற்றோம்
அன்னை தமிழ்ப் பூமியிலே

மழலைகளைச் சுமந்து வந்தோம்
மண்ணதனை விட்டு வந்தோம்
தளர்ந்த உடல் முதியோரை அங்கு
தவிக்க விட்டிங்கு வந்தோம்

கோர்க்காலி நெல்லெடுத்து நாங்கள்
குத்தியென்றும் உண்டு வந்தோம்
ஊர்விட்டு ஊர்சென்று நாம்
உணவுக்காய் அலைகின்றோம்

வீடுவாசல் மரங்கள் எல்லாம்
வீழ்ந்தழிந்து போனதையா
காடுபோல் எம்மூரும் இப்போ
காட்சிதான் தருகுதையா

குடிசையிலே வாழ்ந்தாலும் நாம்
கூழ்குடித்து மகிழ்ந்திருப்போம்
குடிமூழ்கிப் போனதையா எம்
குழந்தைகளும் சோருதையா

ஆவிலே பாலெடுத்து நாங்கள்
அகமகிழப் பருகி வந்தோம்
பாவியர்செய் கொடுமையினால் நாம்
பாலுக்காய் அலைகின்றோம்

பயறுழுந்து தானியங்கள் எம்
பானையிலே நிறையவுண்டு
கயவர்செய் கொடுமையினால் நாம்
கஞ்சிக்காய் அலைகின்றோம்

மண்வீட்டில் வாழ்ந்தாலும் எம்
மனதினிலே வஞ்சமில்லை
கண்பட்டுப் போனதையா நாம்
கதியிழந்து போனமையா

விடிவொன்று வாராதோ எம்
வீடுசென்று சேரோமோ
மிடியுடனே பல நூறு
வேதனைதான் விதியாமோ

பன்றித் தலைச்சித் தாயாரே
பாரேபோற்றும் தாயாரே
கன்றை இழந்த பசுப்போலக்
கதறும் நிலைக்கு ஆளானோம்

அன்று உந்தன் அருளதனால்
ஆவின் தலை பன்றியாச்சு
இன்று எங்கள் இடரகல
ஏதுவழி கூறுமம்மா

-உதயன்-சஞ்சீவி -2000.

# வஞ்சகர் அழிந்திட வேண்டும்

மனிதனை மனிதன் மதித்திடாப் பண்பு
மண்ணினை விட்டிட வேண்டும்
தனித்துத் தாமே சுவைத்திட எண்ணும்
தன்னலம் அகன்றிட வேண்டும்

போட்டிகள் போட்டுப் புவனம் மீதில்
பொருட்கள் சேர்த்தல் வேண்டும்
நாட்டினை உயர்த்தும் நற்பணி என்றும்
நயந்து செய்திடல் வேண்டும்

அடுத்தவனை மிதித்து அவனியில் உயரும்
அநியாயம் அகன்றிட வேண்டும்
அடுத்துக் கெடுத்துக் குடியை அழிக்கும்
அநீதி அகன்றிட வேண்டும்

என்றும் புவியில் எல்லோரும் ஒன்றென
எண்ணிடும் இயல்பு வேண்டும்
நன்றென ஆன்றோர் நவின்ற உண்மைகள்
நாடிப் புரிந்திட வேண்டும்

தீட்டிய மரத்தினிற் கூரினைப் பார்க்கும்
தீமை அகன்றிட வேண்டும்
ஏட்டுக் கல்வி நாட்டுக் குதவிட
ஏற்ற பணிசெய வேண்டும்

மூத்தோர் வார்த்தை முனைப்பாய்ப் பேண
முனைவோர் பெருகிட வேண்டும்
ஏத்தியே வைக்க ஏணியாய் நின்றோர்
இதயம் மகிழ்ந்திட வேண்டும்

அரைகுறைப் படிப்புடன் ஆட்டங்கள் காட்டும்
அறியாமை அகன்றிட வேண்டும்
வரைமுறை இன்றி வாழ்ந்திட எண்ணும்
வஞ்சகர் அழிந்திட வேண்டும்

குறைகுடம் போலே குவலயம் மீதினில்
குழம்புவோர் அகன்றிட வேண்டும்
நிறைகுடம் போலே நித்தம் புவியில்
நிற்போர் நிறைந்திட வேண்டும்

அறியாமை அகற்றிய ஆசான் தன்னை
அவனியில் மதித்திட வேண்டும்
அறியார் செய்யும் அழிவுகள் தன்னை
அன்றே மறந்திடல் வேண்டும்

நாளும் பொழுதும் நன்றே செய்யும்
நற்குணம் மிகுந்திட வேண்டும்
நாளும் நம்பன் அடியினைப் போற்றி
நன்மைகள் பெற்றிட வேண்டும்.

உதயன்-சஞ்சீவி - 1999.10.09

# ஆடிப்பிறப்பினில் கூடி மகிழ்வோம்.

ஆடிப் பிறப்பினில் கூடி மகிழ்வோம்
ஆனந்த மாயிங்கு ஆடிடுவோம்
நாடி உறவுகள் தேடி வருவார்
நாமும் மகிழ்ந்து குலாவிடுவோம்

கூடியிருந்தே நாம் கூழ் குடிப்போம்
குதூகல மாகவே ஆடிடுவோம்
நாடிக் கொழுக்கட்டை தின்றிடுவோம்
நல்சுவை தனையே நயந்திடுவோம்

கூடி யொன்றாயே கும்மி கொட்டி
குழந்தைகள் போலே ஆடிடுவோம்
தாடிக் கிழவனாம் தங்கத் தாத்தா
தந்திட்ட பாடலைப் பாடிடுவோம்

செம்மணி தன்னிற் துயிலுமெம்மவர்
சோகக் கதைகளை கேட்டிடுவோம்
நம்பிரான் நல்லடி நாடியே நாம்
தீர்வொன்று வேண்டி நின்றிடுவோம்

அடிபணி வாழ்வு அகன்றிடவே
ஆற்றலுடன் நாமும் உழைத்திடுவோம்
அடிதடி இல்லாத அமைதிதனை
ஆண்டவன் தன்னையே கேட்டிடுவோம்

ஆடிப் பிறப்பின்று நாடி வந்தது
ஆனந்த மாகவே ஆடிடுவோம்
கூடியெல்லோரும் அமைதி வேண்டிக்
குன்றத்துக் குமரனை வேண்டிடுவோம்

ஆடிப் பிறப்பினில் கூடி யொன்றாகவே
அனைவரும் வாழ வேண்டிடுவோம்
தேடி யமைதி கிடைத்திடவே நாம்
தெய்வத்தின் தாள்களைப் பணிந்திடுவோம்

உதயன்-சஞ்சீவி -1999.07.17

# தமிழ் மொழி

இயலிசை நாடகம் என மூன்றாய்
இலங்கும் எம்தமிழ் முத்தமிழாம்
பயனுடை நூல்கள் பலப்பலவும்
பைந்தமிழ் மொழியிற் பயில்கிறதாம்

இலக்கண இலக்கியத் துறைகளிலே
இன்றமிழ் நூல்கள் பலப்பலவாம்
நலமொடு விளங்கும் நற்றமிழே
நாநிலம் புகழும் நன்மொழியாம்

அகத்தியர் முதலாம் ஆன்றோரும்
அழகுக் குமர ஆண்டவனும்
செகமதில் வளர்த்த செந்தமிழாம்
சேர்புகழ் கொண்ட சீர்தமிழாம்

அமிழ்தென இதற்கு மறுபெயராம்
ஆன்றோர் இட்ட அரும்பெயராம்
தமிழினிமை கண்டே அயலாரும்
தாமும் கற்ற தண்டமிழாம்

ஐம்பெருங் காப்பியம் கொண்டதுவாம்
அருந்தமிழ் மொழியே புகழுடைத்தாம்
கம்பன் கச்சி காளமேகம்
கவிகள் படைத்த கனிமொழியாம்

நுணுகிப் பொருளை விளக்கிடவே
நூலோர் வகுத்த சொற்பலவாம்
அணுகிப் பார்த்தால் அதன்சுவையே
அமிழ்தம் போலே இனித்திடுமாம்

நாளும் பொழுதும் தானறிந்த
நற்புகழ் கொண்ட மொழிகளிலே
நாளும் இனிமை சேரும்மொழி
நற்றமிழ் என்றான் பாரதியே

சிலேடை முதலாம் அணிகளினால்
சீராய்ப் பொருளை விளக்கிடலாம்
மலைபோற் புகழுடை மொழியிதுவாம்
மண்டலம் போற்றும் மொழியிதுவாம்

உயிரும் மெய்யும் உயிர்மெய்யும்
உலவும் ஆய்த எழுத்ததுவும்
பயின்று வழங்கும் பைந்தமழைப்
பாவலர் நாளும் வளர்த்தனரே

இயற்சொல் திசைச்சொல் திரிசொல்லாம்
இலங்கும் வடசொல் சேர்தமிழாம்
பெயர்வினை இடையுரி எனநான்கு
பெரும்பிரிவுடைய பெட்புடைத்தாம்

அயல் நாட்டறிஞர் போப்பையர்
அகராதி சமைத்த அருந்தமிழாம்
பயனுடை சொற்கள் பைந்தமிழிற்
பாரோர் புகழப் பலவுண்டாம்

இச்சகம் மீதில் இன்றமிழை
இனிதே வளர்க்க வேண்டுமென்று
முச்சங்கம் வைத்து முன்னோர்கள்
முனைப்பொடு வளர்த்த முத்தமிழாம்

உலகம் போற்றும் மறைநூலாம்
உத்தமக் குறளைத் தந்தமொழி
நலமே என்றும் வாழியவே
நாநிலம் போற்ற வாழியவே

உதயன்-சஞ்சீவி 1999

# இன்பரசம் என்னாளும் பருகவேண்டும்

காவினிலே குயிலினிசை கேட்க வேண்டும்
காலாற நடைபயின்று களிக்க வேண்டும்
நாவினிக்க நற்றமிழிற் பாட வேண்டும்
நற்றமிழ்க் கவிகளினைச் சுவைக்க வேண்டும்

கொஞ்சிவரும் மழலைமொழி கேட்க வேண்டும்
கோலமயில் ஆடலினைக் காணவேண்டும்
அஞ்சுகத்தின் ஆசைமொழி கேட்க வேண்டும்
ஆனந்த ஊஞ்சலிலே ஆட வேண்டும்

நந்தமிழர் கலாசாரம் நன்றோங்க வேண்டும்
நாரியரும் நன்னடத்தை பேணவேண்டும்
சிந்திடும் குருதிமழை ஓய்ந்திட வேண்டும்
செம்மணிக்கும் ஒருமுடிவு செய்ய வேண்டும்

வண்டமிழர் வருத்தமெல்லாம் மறைய வேண்டும்
வழிப்பயணச் சோதனைகள் மாற வேண்டும்
மண்டலத்தில் அமைதிமழை பொழிய வேண்டும்
மானிடர்கள் ஒற்றுமையாய் மகிழ வேண்டும்

தனித்தமிழின் இனிமையினை உணர வேண்டும்
தரணியிலே தமிழ்நாதம் ஒலிக்க வேண்டும்
குனியாமல் இனி நாங்கள் உயர வேண்டும்
குவலயத்தில் தமிழமுதம் பொங்க வேண்டும்

திருடிப் பிழைப்போரைத் திருத்த வேண்டும்
சீரறுக்கும் கசிப்பினை யழிக்க வேண்டும்
அருகிவரும் கலைகளினை ஆக்க வேண்டும்
அவனிமிசை நம்புகழும் ஓங்க வேண்டும்

பாவலர்கள் நிதம்பாரிற் தோன்ற வேண்டும்
　　　　பைந்தமிழின் சுவையுணர்ந்து பாட வேண்டும்
நாவலர்கள் நானிலத்திற் தோன்ற வேண்டும்
　　　　நற்றமிழின் பெருமையினை நவில வேண்டும்

சாதிமத பேதங்கள் ஒழிய வேண்டும்
　　　　சாந்தமுடன் மக்களிங்கு வாழ வேண்டும்
நீதிநெறி நானிலத்தில் நிலைக்க வேண்டும்
　　　　நிர்வாகச் சீர்கேடு ஒழிய வேண்டும்

வர்த்தகர்கள் பதுக்கலினை மறக்க வேண்டும்
　　　　வாடிடும் மக்கள் துயர் துடைக்க வேண்டும்
நிர்வாகத் திறமையினோர் பெருக வேண்டும்
　　　　நிழல்தந்து மக்களினைக் காக்க வேண்டும்

ஓய்வுபெறும் வயதுவரின் ஒதுங்க வேண்டும்
　　　　ஒழுங்காகக் கோயில்குளம் செல்ல வேண்டும்
நோய்நொடிகள் இல்லாமல் வாழ்தல் வேண்டும்
　　　　நொட்டைச் சொல்கேளாமல் இருத்தல் வேண்டும்

என்னாசை இத்தனையும் நிறைவேற வேண்டும்
　　　　எல்லோரும் மகிழ்வோடு வாழ வேண்டும்
இன்னாட்டில் அமைதியது பெருக வேண்டும்
　　　　இன்பரசம் என்னாளும் பருக வேண்டும்

உதயன்-சஞ்சீவி - 1999.03.27

# ஊழல் மலிந்த உலகு

காசுபணம் சேர்த்துக் கனவானா னாலிங்கு
வீசுபுக ழொடு வாழலாம் - நாதியற்றோர்
வாழல் முடியுமோ வையகத் தோரேயிது
ஊழல் மலிந்த உலகு

அரச பணிமுதல் அனைத்துப் பணிகளிலும்
தரகுப் பணமின்றித் தரணியில் - கரவின்றி
ஆழப் பணிதனை அற்றார் பெறுவரோ
ஊழல் மலிந்த உலகு

பணமது தந்தாற் பதிவிலாப் பத்திரமும்
கணப்போ திலெடுத்துக் காட்டுவார் -பணமின்றி
நீதியாய் விண்ணப்பம் நிறைவாய்ச் செய்தாலும்
நாதியற்றுப் போவாய் நம்பு

நீதியாய் நாமும் நீடித்து வாழ்வமென
ஓதியே என்றும் உணர்ந்து - நீதியாய்
வாழ்வமென எண்ணி வாழலும் முடியுமோ
ஊழல் மலிந்த உலகு

சில்லறைகள் சிலபேர்க்குச் சீராய் வழங்கினால்
நல்லபயன் கிட்டும் நமக்கு - இல்லையேல்
இழுபட்டுத் தாமதித்து இரக்கமில் லாமலவர்
பழுதென்று பகர்வார் பார்

ஊழலது தொலைந்து உவப்பாய் நாமிங்கு
வாழலும் கூடுமோ வாழ்வில் - பாழ்பட்ட
ஊழலே உயர்ந்து உலகமதை அழித்துப்
பாழடைந்து போகுமோ பார்

வள்ளுவனும் வாரானோ வாரிக் கொடுத்திட்ட
வள்ளலாம் பாரியும் வாரானோ - கள்ளமாம்
ஊழலை யொழித்திடவே உலகினில் மீண்டும்
வாழவே என்றும் வழுத்து

புலமைப் பரிசிலிலும் புதுமுகத் தேர்வினிலும்
நலமாகச் செய்தாலும் நம்மூரார் - பலமின்றி
வாழ்தலே போல வையகம் ஆள்வோர்
ஊழலே புரிகின்றார் உணர்

எப்போது கண்டு இனிதாகப் பாடுவேன்
இப்பாரில் ஊழல் இல்லையெனச் - செப்பியே
நாளும் நல்லோராய் நம்மக்கள் ஈங்கே
வாழும் வகையினை வழுத்தி

உதயன்- சஞ்சீவி -1999



## நானறிந்த வயலூரான்

கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு செ.சுதாகரன் அவர்கள் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி கற்று 1989 முதல் தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றியவர். 1996 முதல் அரசதுறையில் பொது எழுதுநராக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலும், பொது முகாமைத்துவ உதவியாளராக தென்மராட்சி, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றி, தற்போது பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரிகின்றார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலே மாணவனாக இருந்த காலத்தே தனது நண்பர்களுடன் இணைந்து வெளியிட்ட 'கலைத் தென்றல்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையினூடாகப் பல புதுக்கவிதைகளை எழுதினார். புதுக்கவிதை போலவே மரபுக் கவிதையிலும் பரிச்சயம் மிக்கவர். 'வயலூரான்' என்ற புனைபெயரில் இவர் முதன் முதலில் எழுதிய 'நிலையான மனம் தருவாய்' என்ற மரபுக்கவிதை உதயன் பத்திரிகையில் வெளிவந்தது. தொடர்ந்து பத்திரிகைகளில் பல கவிதைகளை எழுதியதோடு உதயன் பத்திரிகையில் ஒரு கவிஞருடன் கவிவாதங்களும் புரிந்தவர்.

அண்மையில் கல்வயல் வேதவன விநாயகர் மீது 'பிள்ளைத் தமிழ்' ஒன்றைப் பாடியதன் மூலம் 'வேதவனக் கவிமாமணி', 'தெய்வீகக் கவி வள்ளல்' என்ற கௌரவப் பட்டங்களைப் பெற்றவர். இவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக '**வயலூரானின் வரிகள்**' எனும் இக் கவிநூல் வெளிவருகின்றது. கவியுலகம் உவந்தேற்றுப் பயன் பெறுக.

**திரு.சோ.கோகுலன்.**
ஆசிரிய ஆலோசகர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்

